
# திருமலைத்தீபம்

தீபம் – 77 | March - 2022 | Email : theepamlink@gmail.com | TP: 026 2221022/ 026 2054362 | Rs. 30/=


## பெருந்திரளான மக்களின் கண்ணீரின் மத்தியில் அருட்பணியாளர் கணேசப்பிள்ளை நிதிதாசன் அடிகளாரின் பூதவுடல் நல்லடக்கம்



கடந்த 1ம் திகதி (01.03.2022) காலம் சென்ற அருட்பணி. G.நிதிதாசன் அடிகளாரின் இறுதி நிகழ்வுகள் 03.03.2022 அன்று நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. நோயல் இம்மானுவல் ஆண்டகை தலைமையில், மட்டக்களப்பு, அனுராதபுரம் மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்டம் ஆகிய மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள், துணை ஆயர் ஆகியோருடன், இலங்கை முழுவதிலிருந்து வருகை தந்திருந்த குருக்கள், இருபால் துறவிகள், இறைமக்கள் இணைந்து அடிகளாரின் நல்லடக்கத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். அருட்தந்தையின் திடீர் மரணத்தினால் அடைந்திருந்த அதிர்ச்சி அனைவரிடமும் வெளிப்பட்டது. கண்ணீர் ததும்பும் கண்களோடு வழிபாடுகளில் பங்கெடுத்த திரு அவை இயேசுவின் "மனுவுருவான இறைவன்" என்ற நம்பிக்கைச் சத்தியத்தை அவ்வேளை பறைசாற்றியது. மனித உடலுக்கும், உள்ளத்திற்கும் உரிய வேதனையை கண்களில் வெளிக்கொணர்ந்தாலும் கூடி வந்த அனைவரும் இவரும் ஆண்டவர் இயேசுவோடு உயிர்த்தெழுவார் என்று இறைவனிடம் அருட்பணியாரை ஒப்புக்கொடுத்த செயல் வழியாக தம் இறைநம்பிக்கையை ஒரே குடும்பமாய் பறைசாற்றினர். தங்கள் பங்குத்தந்தை, தங்கள் மகன், தங்கள் சகோதரன், தங்கள் நண்பன், தங்கள் உடன் பணியாளன், தங்கள் தகப்பன் என்று ஒவ்வொருவரும் அவரோடு அவர்களுக்குண்டான உறவினையும், நெருக்கத்தினையும் நினைந்து நினைந்து ஆறுதல் பெற விரும்பாதவர்களாக கதறிய காட்சி அருட்பணி. G.நிதிதாசன் அடிகளார் மனிதனான இறைவனை தம் மனித வாழ்வினூடாக வாழ்ந்துவிட்டார் என்பதன் சாட்சியாக நின்றது. ஆலயத்திலிருந்து அவருக்கான இறுதி மரியாதையை



நிறைவேற்ற மிக நீண்ட வரிசையாக சேமக்காலை வரை சென்ற அனைவரும், அங்கும் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படுகையில் பெருக்கெடுத்த கண்ணீரோடும் கலங்கிய உள்ளங்களோடும் அவருக்கு இறுதி மரியாதை செய்த போது அருட்பணி. G.நிதிதாசன் அடிகளின் எளிய வாழ்வினையும், எல்லோருடனும் அன்பு பாராட்டும் அவரது குணத்தினையும் அவர்கள் கதறலிலும் உரத்துச் சொல்லினர். நீர் எங்களுக்குச் செய்தவைகளுக்கு இப்போது கைம்மாறு செய்ய எங்களிடம் கண்ணீரைத் தவிர வேறு இல்லை என்பதாக கதறிய மக்கள் தங்களால் இயன்றவரை அழுது அழுது அந்த அன்பின் தந்தைக்கு அஞ்சலி செய்தார்கள். வீதியெங்கும் இருந்த பதாதைகளில் சிரித்துக்கொண்டிருக்கும் அருட்பணி. G.நிதிதாசன் அடிகளாருக்கு இறைவன் என்றும் தம்மோடு வாழும் மகிழ்வின் வரத்தினை அளிக்கவேண்டும் என்ற வேண்டுதலோடும் கனத்த இதயங்களோடும், அவரது பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் திருகோணமலை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



## நம்பிக்கை விதை யாக ்கப்பட்டது!

அருட்பணி. கணேசப்பிள்ளை நிதிதாசன் அடிகளார் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டு அந்த நம்பிக்கையில் குருவாக தன்னை அர்ப்பணித்து அந்த நம்பிக்கையை இறைவார்த்தையின் ஊழியனாகப் பறைசாற்றி பல ஆன்மாக்களை அந்த உயிர்ப்பின் நம்பிக்கையினால் வளப்படுத்தினார். அதே உயிர்ப்பின் நம்பிக்கையில் அவரை நம்பிக்கையாளர் சபையாக நாம் விதையாக இம்மண்ணில் விதைத்திருக்கின்றோம். அவரது வாழ்வு மட்டுமல்ல அவரது இறுதிப் பயணமும் நம்பிக்கையை அடுத்தவர்க்கு இன்னும் வளப்படுத்தும் நிகழ்வாகவே அமைந்திருந்தது. ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள், இறைமக்கள், நண்பர்கள் என்று அனைவரும் ஒன்றுகூடி இறைவன் இவ்வருட்தந்தைக்கும் அவர் வழியாக மக்களுக்கும் செய்து வந்த செயல்களை தம் வார்த்தைகளாலும், செயல்களாலும், கண்ணீராலும் பறைசாற்றினர். ஒவ்வொருவரின் வார்த்தையும் இறைவனில் அருட்தந்தை கணேசப்பிள்ளை நிதிதாசன் அடிகளார் வைத்திருந்த ஆழ்ந்த நம்பிக்கையையும் அதனால் அவர் பகிர்ந்துகொண்ட மகிழ்வையும் உரக்கப் பறைசாற்றியது. இவற்றைக் கண்டோர், கேட்டோர் அனைவரிடமும் இறைபக்தியும், இறையன்பும் பெருகுவதை நாம் உணரமுடிந்தது. இதை விடவும் ஒரு நம்பிக்கையின் சாட்சி எதைச் செய்துவிட முடியும். இவரது மரணம் எதிர்பாராததாக இருந்தாலும் இவரது வாழ்வும், இவரது இறுதிச்சடங்குகளும் இறைவனின் உயிருள்ள வார்த்தைகள் எதை எதிர்பார்த்ததோ அதைச் செய்து முடிப்பதாய் அமைந்திருந்தது. இவரது உடல் மண்ணில் ஒரு நம்பிக்கையின் விதையாக விதைக்கப்பட்டுள்ளது. இவ்வுலகில் பயணத்தைத் தொடரவிருக்கும் ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் இவரைப் பற்றிப் பறைசாற்றப்பட்ட வார்த்தைகளும் இவரது உடலின் நல்லடக்கமும் நம்பிக்கையில் தளராது இருக்க பலம் அளிக்கின்றது. இவ்வாறு விசுவாசத்தின் விதையாக விதைக்கப்பட்டுள்ள அருட்பணி. கணேசப்பிள்ளை நிதிதாசன் அடிகளார் பல உள்ளங்களில் நம்பிக்கையின் பெருவிருட்சமாக வளர்ந்து கனிகொடுக்க ஆசிப்போம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16வது பொது ஆயர்கள் மாமன்ற சாதாரண ஒன்றுகூடல்
## அக்டோபர் 2021 – அக்டோபர் 2023 வரை



16வது பொது ஆயர்கள் மாமன்ற சாதாரண ஒன்றுகூடலின் அறிமுக நிகழ்வானது 08.01.2022 திருகோணமலை மறைமாவட்டத்திலுள்ள அனைத்து குருக்கள் துறவிகளுக்காக நடாத்தப்பட்டது. இந்நிகழ்வின் சிறப்பு உரையாளர்களாக அருட்பணி. T. கிங்ஸ்லி றொபட் அடிகளார், அருட்பணி. B. போல் றொபின்சன் போல் அடிகளார், அருட்பணி. A.A. நவரெட்ணம் அடிகளார் ஆகியோர் மூன்று தலைப்புக்களில் உரையாற்றினர்.

16வது பொது ஆயர்கள் மாமன்ற சாதாரண ஒன்றுகூடலின் அறிமுக நிகழ்வானது 14.01.2022 சிங்கள மொழிபேசும் பொதுநிலையினருக்கு மாமன்ற மறைமாவட்டக் குழுவினரால் நடாத்தப்பட்டது.



16வது பொது ஆயர்கள் மாமன்ற சாதாரண ஒன்றுகூடலின் அறிமுக நிகழ்வானது 15.01.2022 மூதூர் மறைக்கோட்ட பொதுநிலையினருக்கு மாமன்ற மறைமாவட்டக் குழுவினரால் நடாத்தப்பட்டது.



16வது பொது ஆயர்கள் மாமன்ற சாதாரண ஒன்றுகூடலின் அறிமுக நிகழ்வானது 29.01.2022 திருகோணமலை மறைக்கோட்ட பொதுநிலையினருக்கு மாமன்ற மறைமாவட்டக் குழுவினரால் நடாத்தப்பட்டது.



# மறைமாவட்ட பீடப்பணியாளர்களுக்கான பயிற்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளும்

பாடசாலை விடுமுறைக் காலத்தில் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் பணிபுரியும் பீடப்பணியாளர்ளுக்கு பயிற்சியளித்து அவர்களை உருவாக்கும், மற்றும் பயிற்சியை மேற்கொள்வோருக்கு சான்றிதழ்கள் வழங்கி அவர்களைக் கௌரவப்படுத்தும் சிறப்பு நிகழ்வை மறைமாவட்ட பீடப்பணியாளர்களின் ஆன்மீக இயக்குனர் அருட்பணி. றொயிசன் ஸ்பார்க் அடிகளார் அவர்கள் மறைக்கோட்ட ரீதியாக மேற்கொண்டார். அதன்படி திருகோணமலை, நிலாவெளி, மற்றும் மூதூர் ஆகிய மறைக்கோட்டங்களில் இந்நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.



"தனக்கு கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பை விட தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன் தான் சமூகத்தில் முன்னேற முடியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவனே நம் நம்பிக்கை

கிறிஸ்துவிற்குள் பிரியமானவர்களே !

உங்கள் எல்லோரையும் மீண்டும் திருமலைத்தீபம் பத்திரிகை வழியாய் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். உலகம் முழுவதும், எங்கள் இலங்கை திருநாட்டிலும் நடைபெற்ற நிகழ்வுகள் எம்மை அச்சத்திலும், எம் எதிர்காலத்தை கேள்விக்குறியிலும் விட்டுச்சென்றிருக்கின்றது. கடந்து வந்த தொற்று நோயில் இருந்து உலகம் கொஞ்சம் கொஞ்சமாய் தன்னை மீள்கட்டமைக்க ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் நம் இலங்கை தேசமோ இன்னும் மீளமுடியாத பாதாளத்திற்குள் சென்று கொண்டிருக்கின்றது. தொற்று நோய் குறித்த கவலையை விட்டு உண்ண உணவிற்காகவும், அன்றாட வாழ்வின் தேவைக்காகவும் மக்கள் கவலைப்படுகின்ற காலம் தோன்றி இருக்கின்றது. பொருளாதாரத்தின் வீழ்ச்சியும், வருமானத்தின் வீழ்ச்சியும், பொருட்களின் பற்றாக்குறையும் வெவ்வேறுவகையான இன்னும் இறுக்கமான வாழ்க்கைச் சூழலும் இலங்கை மக்களை இப்பொழுது வாட்டி துன்பப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு மின்வெட்டு இருக்குமா? எரிபொருள் நிலையத்தில் எண்ணெய் இருக்குமா? காலையில் பயணத்திற்கு பஸ் இருக்குமா? அல்லது கடையில் பால்மா இருக்குமா? என்று எப்போது எது இல்லாமல் போகும் என்று தெரியாத சூழ்நிலையிலே பயத்தோடும், பதற்றத்தோடும் நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நேரத்திலே எங்கள் எல்லோருக்கும் இருக்கும் ஒரே நம்பிக்கை நம் இறைவன் மட்டுமே. எங்களைப் படைத்தவர் எங்களை காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையோடு தான் ஆலயங்கள் நோக்கி படையெடுக்கின்றோம். ஆண்டவரை நோக்கி பார்க்கின்றோம். "என் ஆயன் என் ஆண்டவர் எனக்கு ஏதும் குறையில்லை, பசும் புல் வெளிமீது அவர் என்னை இளைப்பாறச் செய்வார்." (தி பா. 23, 1 - 2) என்ற வார்த்தை இந்த நாட்களிலே நம் மனதிற்கு ஆறுதலாகவும், நம்முடைய வாழ்க்கைக்கு உத்வேகமாகவும் அமைய வேண்டும். ஏனெனில் கவலைப்படுவதால் ஒருவர் தன்னுடைய உயரத்திற்கு ஒரு முழத்தை கூட கூட்டமுடியாது. சிட்டுக் குருவிகளுக்கும், காட்டுச் செடிகளுக்கும் கூட ஆண்டவர் இரக்கம் காட்டுகின்றார். நீங்கள் அவற்றிலும் மேலானவர்கள் அல்லவா (லூக்கா 12, 28) என்ற இறைவார்த்தைகள் இன்னும் எங்களுக்கு நம்பிக்கை தருகின்றது. எல்லாமே இருளாய் இருந்தாலும் என் ஆண்டவர் எனக்கு வெளிச்சமாய் அதற்குள்ளே நடக்க வழிகாட்டுவார் என்ற நம்பிக்கையோடு நாங்கள் ஒவ்வொரு நாளையும் ஆரம்பிப்போம். "நான் இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் இறங்கி நடக்க நேர்ந்தாலும் அவருடைய கோலும், நெடுங்களியும் என்னைத் தேற்றும்" (தி.பா 23, 4) என்கின்ற திருப்பாடல் வரிகள் எங்கள் வாழ்விற்கு வழிகாட்டும். இந்த நாட்களிலே மனம் உடைந்து போகாமலும், சோர்ந்து போகாமலும், நடப்பதைக் கண்டு அச்சம் அடையாமலும், தொடர்ந்து நடக்க இறைவனின் வார்த்தைகள் நமக்கு உதவியாய் இருக்கட்டும். ஆண்டவர் உங்களோடு இருந்து உங்களை வழிநடத்தும் படி அவர் மீது நம்பிக்கை வைத்து தொடர்ந்து பயணியுங்கள். எங்கள் இறைவன் எங்களோடு இருக்கின்றார். எங்களை தெரிந்தவர் எங்களை கைவிடமாட்டார். அவர்கள் அழுகுரல் கேட்டு இறங்கி வந்து அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்ட இறைவனை இஸ்ரயேல் மக்கள் எங்கள் கடவுள் என்று கொண்டாடினார்கள். (வி.ப 3) நாங்களும் எங்கள் அழுகுரலைக் கேட்டு எங்களை மீட்க இறைவன் இறங்கிவருவார் என்ற நம்பிக்கையோடு அந்த இறைவனைக் கொண்டாடுவோம். அந்த இறைவனில் நம்பிக்கை வைத்து எங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்வோம்.

தொடர்ந்து சந்திப்போம்

இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக

ஆசிரியர்!



## படித்ததில் பிடித்தது

## திருப்தி



தவம் கிடந்தான் பக்தன்.

கடவுள் மனமிரங்கினார்.
பக்தனைத் திருப்திப்படுத்த முடிவெடுத்தார்.

அவன் முன் தோன்றினார்:
'பக்தா...
உன் பக்தியை மெச்சினோம்,
இதோ என் பரிசு..!'

வீட்டிலுள்ள ஒரு அரிசி மூட்டையை ஆள்காட்டி விரலால் தொட்டார்.
அப்படியே பொன்னானது.

பக்தன் முகம் பிரகாசமானது.
ஆனால் திருப்தி இல்லை.

அருகிலுள்ள கட்டிலைத் தொட்டார்.
அதுவும் பொன்னானது.
பக்தன் முகத்தில் திருப்தி இல்லை.

பார்த்தார் கடவுள்.
வீட்டிலுள்ள எல்லாப் பொருட்களையும்
ஓடி ஓடித் தன் ஆள்காட்டி விரலால் தொட்டார் கடவுள்.
தொட்டதெல்லாம் பொன்னானது.

பெருமிதத்தோடு பக்தனைப் பார்த்தார்:
'பார்தாயா பக்தா...!
எல்லாமே உனக்குத்தான்.
எடுத்துக்கோ..!'

அந்தோ பரிதாபம்..!
பக்தன் முகத்தில் நிறைவான திருப்தி இன்னும் வரலே இல்லை.

கடவுள் கேட்டார்:
பக்தா..!
உனக்கு இன்னும் என்ன தான் வேண்டும்?


பக்தன் திருவாய் மலர்ந்தான்:
'உன் ஆள்காட்டி விரல்..!'


பொன்முட்டையிடும் வாத்தின்
வயிற்றையே கீறிப் பார்த்த
பரம்பரையல்லவா உன் பரம்பரை..!

**எல்லையற்ற திருப்தியே திருப்தியின் எல்லை..!**

அருட்பணி T. கிங்ஸிலி றொய்

# மறைமாவட்ட பீடப்பணியாளர்களுக்கான பயிற்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளும் – புனித மரியாள் பேராலயம்





பாடசாலை விடுமுறைக் காலத்தில் பீடப்பணியாளர்களுக்கான உருவாக்கல் பயிற்சியளிக்கும் செயற்திட்டத்தின் கீழ் மறைமாவட்ட பீடப்பணியாளர்களின் ஆன்மீக இயக்குனர் அருட்பணி. றொயிசன் ஸ்பார்க் அடிகளார் தலைமையில் திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தின் பீடப்பணியாளர்களுக்கான பயிற்சியும், பகங்கேற்றோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சிறப்புற நடைபெற்றது.

"நாம் செய்யும் ஒரு விஷயத்தை சிறந்ததாக்க நம்மால் முடிந்த அளவு உழைப்பைக் கொடுக்க வேண்டும், 'முடிந்த அளவு' அதை கடைசி வரை கொடுக்க வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்றாண்டு வளர்ச்சியில் அப்போஸ்தலிக்க கார்மேல்....

பார்போற்றும் பாவையாக
பார்மணம் பரவச்செய்து
தூய வேத சுடர் தரித்து
சேவைத் திலகமாய்
புது மலர்ச் செம்மலாய்
கார்மேல் சபையின் சின்னமாய்
வந்துதித்த கன்னியே வெரோணிக்கா

சோதனை அலைகளில் இறை
சாதனைப் பெண்ணாக
ஐரோப்பிய நாட்டில் பிறந்து
அக்கலாச்சாரத்தில் வளர்ந்து
கிறிஸ்தவ சமயத்தில் வேரூன்றி
இதயத்தில் இறையை சுமந்து
பண்பாய் வளர்க்கப்பட்டு
பாரினில் ஜொலித்த ஆங்கிலப் பெண்!

உங்கள் இறைவாழ்வு
கார்மேல் சபையின் உருவாக்கத்துக்கும்
வளர்ச்சிக்கும் ஏணிப்படிகள்
உங்களின் மரணம் கூட
ஆண்டுதோறும் தேதி வைத்து
நினைவு கூறப்படுகின்றது

இளம் பெண்களுக்கு
கல்வியூட்டி கத்தோலிக்க
மதிப்பீடுகளை விதைத்த நீங்கள்
115ஆம் ஆண்டினை நினைவாக
நினைவில் நிறுத்தப்படுகின்றீர்கள்

தம் வாழ்வையே உருக்கி
அணையா தீபமாய் ஒளிகொடுத்து
1906 இல் இவ்வுலகில் தன் பயணத்தை
இனிதே நிறைவு செய்து
விண்ணுலகம் சென்றது
ஒரு சரித்திரத்தின் ஆரம்பம் விழவெள்ளியாக

அப்போஸ்தலிக்க கார்மேல் சபை
இலங்கையில் அனுராதபுரம், இரத்தினபுரி தவிர்ந்த
ஏனைய மறைமாவட்டங்களில்
அன்னையின் போதனைகள்
சாதனை அலைகளாக
ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும்
எல்லா வேளைகளிலும்
பார் உலகம் ஓயும் வரை
அது தொடர் அலைகளாக
இலங்கையில் 40 கன்னியர் இல்லங்களிலும்
பாகிஸ்தானில் 04 கன்னியர் இல்லங்களிலும்
"இறைவனே எம் நிறைவு"
என்ற தேனிலும் இனிய
தெவிட்டாத சுவையாய்
ஒலித்தும், திருவாக்காய்
எம் சேவைகள் மலரட்டும்
எம் சுவடுகள் பதிந்த
இடங்களில் எல்லாம்
இறையரசு மலரட்டும்

கார்மேல் தோட்டத்தில் பூத்த
புதுமலர்களே உங்கள் சேவைகளில்
எங்கள் தேவைகளை உணர்கின்றோம்
உங்கள் வாழ்வின் எதிரொலி
எம் நாட்டிலும் எம் இதயங்களிலும்
ஒழிக்கட்டும் தொடராக

அருட்சகோதரி மேரி பிரியவதனி அ.கா

### இன்னுமா தயக்கம் - 22


## புறணி பேசலாம் வாருங்கள்!

அன்பார்ந்தவர்களே. புதிய ஆண்டில் பயணம் செய்து கொண்டிருக்கின்றோம். இந்த ஆண்டு மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக அனைவருக்கும் மலர இறைவனை வேண்டுகிறோம்.

ஒவ்வொரு புதிய ஆண்டும் பிறக்கும் போதும் நாம் ஒரு உறுதி மொழியை எடுப்பது வழக்கம், இந்த ஆண்டு நீங்கள் என்ன உறுதி மொழி எடுத்தீர்கள்? அவ்வாறு எடுத்துவிட்டீர்கள் என்றால் அந்த உறுதி மொழியை பின்பற்றுங்கள். அவ்வாறில்லை என்றால், நான் உங்களுக்கு ஒன்றை முன்மொழிய விழைகின்றேன். அந்த முன்மொழிவை இந்த கட்டுரையின் இறுதியில் கூறுகின்றேன்.

**புறணி ஒரு போதை:**
பொதுவாகவே, புறணி பேசுவது என்பது நமக்கு சற்று பிடித்தமான ஒரு விடயம். அதற்குக் காரணம் என்னவென்று தெரியாது, ஆனால், புறணி பேச பிடிக்கும். இவ்வாறு புறணி பேச பிடிக்காத நபர்கள் மிக மிக குறைவு என்று தான் சொல்ல வேண்டும். சமீபத்தில் ஒரு உளவியலாளர் தான் எடுத்த கணிப்பின்படி, புறணி போதை இல்லாத மனிதர்கள், மிகவும் அரிதாகத் தான் காணப்படுகின்றார்கள் என்று கூறுகின்றார். இதை அவர் போதை என்று குறிப்பிடுவதற்குக் காரணம், அந்த புறணி பேசுவதால் என்ன நன்மை, அல்லது அவ்வாறு பேசுவதற்கு என்ன காரணம் என்றே யாருக்கும் சொல்ல தெரியவில்லை, ஆனால் அது பலருக்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக அவர் பார்க்கின்றார். நமக்கு போதை என்றவுடன் மது போதை தான் நினைவுக்கு வரும். மது போதை தவறானது என்று அறிந்தும் பலர் அந்த போதையினின்று வெளிவர முடியாமல் தவிக்கின்றார்கள் என்றால், அவர்களுக்கும் இது தான் பிரச்சனை. அவர்களுக்கும் ஏன் நாம் குடிக்கின்றோம். இதனால் ஏதாவது நன்மை உள்ளதா என்ற கேள்விகளுக்கு பதில் தெரியாது.

மது போதையை விட மிகவும் கொடுமையானது புறணி பேசும் போதை. இதற்கு நான் சில வலுவான காரணங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். நான் ஏற்கனவே கூறியது போல, புறணி பேசும் போதையை நான் ஏன் விரும்புகிறேன் என்று கூற முடியாதோ, அது போன்று அதனால் என்ன பயன் என்றும் கூற முடியாது. காரணம், புறணி பேசுவதால் ஒரு நன்மையும் நடக்காது என்பதே உண்மை நன்மைக்குப் பதிலாக பல தீமைகள் தான் புறணி பேசுவதால் விளைகின்றது. ஆனால், யாரும் புறணியால் தீமைகளை ஏற்றுக் கொள்வதே இல்லை.



**ஏன் புறணி?**
முதல் தீமையாக, ஒரு மனிதனின் அழகை இந்த புறணி கெடுக்கின்றது. எந்த ஒரு மனிதனும், தானே விரும்பி தன் அழகைக் கெடுத்துக் கொள்ளமாட்டான். ஆனால், தான் அறியாமலேயே புறணி பேசுவதால் ஒரு மனிதன் தன் அசிங்கங்களை பிறருக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றான் என்றால் அதை போதை என்று சொல்வதை விட என்ன சொல்வது.

உளவியலாளர்களின் கருத்தப்படி, ஒரு மனிதன் தன்னிடமுள்ளவற்றைத் தான் பிறரிடம் காண முடியும் தன்னிடம் நல்ல குணம் இருப்பின் அந்த நல்ல குணத்தை பிறரிடம் காண்கின்றான், அதை மனமுவந்து பாராட்டுகின்றான். அதே போன்று ஒரு தவறை தன்னிடம் கண்டு அதை யாரும் பார்த்துவிடக் கூடாது என்று எண்ணுகிறானோ, அதே தவறு இன்னொருவரிடம் இருந்தால், அதைத்தான் அவன் முதலில் பார்க்கிறான். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக பள்ளி வாழ்க்கையைக் கூறலாம். ஆசிரியர் வீட்டுப் பாடம் எழுதி வரச் சொன்னால், நான் வீட்டுப் பாடம் எழுதி விட்டால் பிரச்சனை இல்லை ஆனால் எழுதாமல் வந்தால், என்னைப் போல் யார் எழுதாமல் வந்திருக்கின்றார்கள் என்று தான் நான் முதலில் தேடிக்கொண்டிருப்பேன். தான் செய்த தவறை வேறு யார் செய்துள்ளார்கள் என்று தேடுவதே மனித மனம். எனவே புறணி பேசுவதன் மூலம் நான் பிறரை காட்டிக் கொடுக்கின்றேனோ, அவரிடம் இல்லை, மாறாக என்னிடம் தான் இருக்கின்றது. எனவே புறணி பேசுவதன் மூலம் நான் பிறரை காட்டிக் கொடுக்கின்றேனோ இல்லையோ, என்னையே நான் காட்டிக்கொடுத்து நானே அசிங்கப்படுத்திக் கொள்கின்றேன்.

விவிலியத்திலே, பல பரிசேயர்கள், சதுசேயர்கள் மற்றும் மறைநூல் அறிஞர்களைப் பார்க்கின்றோம். அவர்கள் பிறரிடம் குற்றம் காண்பதையே தொழிலாக வைத்திருந்தார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்" என்று கூறுவார். காரணம், அவர்கள் தோற்றத்தில் பகட்டாக உடை அணிந்திருந்தாலும், உள்ளத்தில் பல்வேறுவிதமான நாற்றங்களைத் தான் கொண்டிருக்கின்றார்கள். அந்த நாற்றங்களே அவர்களது செயல்களில் வெளிப்படுகின்றது.

**நானும் தீர்ப்பிடேன்!**
இதைத் தொடர்ந்து தான், ஆண்டவர் இயேசு கூறுவார். "நானும் தீர்ப்பிடேன்!" என்று. இந்த "நானும் தீர்ப்பிடேன்!" என்ற வார்த்தையை ஒரு விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணிடம் கூறுகின்றார் என்றால், அவரது திடமான மனநிலையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். யாரையுமே, ஏன் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணையும் கூட நான் தீர்ப்பிட மாட்டேன் என்று இயேசு கூறுகின்றார். அத்தகைய படிப்பினையை நமக்கும் கற்றுத் தருகின்றார். "நீங்கள் எந்த அளவையால் அளக்கின்றீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்று அவர் கூறுவதன் பொருள், "நீங்கள் பிறரை தீர்ப்பிட்டு எதிர்மறையான கருத்துக்களை அவர்களுக்கு எதிராக கூறினீர்கள் என்றால், உங்களுக்கெதிராகவும் அதே எதிர்மறையான கருத்துக்கள் கூறப்படும், மாறாக நீங்கள் மற்றவர்களைப் பற்றி நேர்மறையான கருத்துக்களை கூறினீர்கள் என்றால், உங்களுக்கும் நேர்மறையான கருத்துக்களே கூறப்படும்" என்பதே.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம், மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு"

என்ற திருக்குறளை நாம் படித்திருப்போம், இதன் அர்த்தம், "தண்ணீரின் உயரத்திற்கேற்ப தாமரை செடியின் உயரம் வளர்வது போல மனிதர்களின் உள்ளத்தின் உயர்வே அவர்கள் வாழ்வின் உயர்வு"
ஒரு மனிதன் நேர்மறை சிந்தனைகளைக் கொண்டிருந்தால், அவனது வாழ்வு மிக உயர்வானதாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் வளர்கின்றது. ஆனால் அவன் எதிர்மறை சிந்தனைகளைக் கொண்டிருந்தால், அவனது வாழ்வு தாழ்வடைந்து எரிச்சலும், வெறுப்பும் கோபமும் வெறுமையும் நிறைந்ததாக மாறி, குறை சொல்வதும் குற்றம் காண்பதுமே அவர்களது முதன்மை செயலாக மாறிவிடுகின்றது.

**இந்த ஆண்டின் தீர்மானம்:**
ஓடும் நீர் சுத்தமான தண்ணீராக இருந்தால், அதன் சுற்றுப்புறங்கள் தூய்மையாகவும் விரும்பத்தக்கதாகவும் இருக்கின்றது. பல அழகிய செடி கொடிகள் அதில் உருவாகின்றன. ஆனால், அது ஒரு சாக்கடை ஓடும் ஓடையாக இருந்தால், அதன் சுற்றுப்புறம் நாற்றமெடுத்து யாரும் அங்கு செல்ல முடியாத இடமாக மாறிவிடுகின்றது. நமது மனமும் அப்படித்தான் நம் மனதில் நல்ல எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தால், நம்மை அனைவரும் விரும்புகின்றனர். ஆனால், நம் மனதில் எதிர்மறை எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தால், நம்மை அனைவரும் வெறுக்க ஆரம்பிக்கின்றனர். எனவே பிறரைப் பற்றிய தவறான எண்ணங்களை வெளிப்படுத்தல், நம் ஆளுமையை நாமே அசிங்கப்படுத்திக் கொள்ளும் செயலாகும்.

எனவே இந்த ஆண்டு ஒரு உறுதி மொழியை எடுக்க விரும்பினால், "இனிமேல் நான் யாரையும் பற்றி புறணி பேச மாட்டேன் அனைவரையும் பற்றி நேர்மறையாக சிந்தித்து நேர்மறையான கருத்துக்களை பகிரமாட்டேன்!" என்று உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். இதுவே கிறிஸ்தவ எண்ணமாகும் மகிழ்வாக வாழும் இரகசியமாகும்.

இறையாசீருடன்
அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா க.ச

"ஒரு மரத்தை வெட்ட எனக்கு ஆறு மணி நேரம் அளிக்கப்பட்டால் அதில் நான்கு மணி நேரத்தை கோடாரியைக் கூர்தீட்டவே பயன்படுத்துவேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் இறையியலும் முதற்பாவமும்

அறிகிறோம். அத்தோடு மனிதஉடல் மனிதனின் முழுஆள்தன்மையை வெளிப்படுத்துகின்றது. என்பதனையும் நாம் குறியீட்டு இயல்புடைய படைப்புக்கள், எமது உடல்களால் அன்பு செய்ய அழைக்கப்படுகின்றோம். என்பதையும், எமது உடல்கள் அன்பைத்தவிர கீழான உணர்வுகளுக்கு படைக்கப்படவில்லை என்பதையும், எமது உடலானது பாலியல்பைவிட உறவுமுறைகளுக்கே உருவாக்கப்பட்டது. என்பதையும் உடல் இறையியல் கற்றுக்கொடுக்கின்றது. பாலுறவு என்பது முக்கியமானது என்கின்ற கருத்து மனிதஉறவுகள் அதிமுக்கியமானது என்கின்ற கருத்துண்மையிலிருந்து புறப்படுகின்றது. எங்கள் உடல்கள் பாவக்காயமுற்றிருக்கும் அதேவேளை பாவத்தில் இருந்து விடுதலையும் பெற்றிருக்கின்றன. இறுதியாக இயேசுகிறிஸ்துவின் மீட்புச்செயலால் எமது உடல் பற்றிய ஆழமான தெளிவினை பெற்றுள்ள நாம் எமது உடல்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. என்பதனை உடல்இறையியல் உறுதிப்படுத்துகின்றது. இயேசு கிறிஸ்துவை அறிவதும், அவரை அன்பு செய்வதும் ஒரு அனுபவமாகும். இந்த அனுபவத்தின் ஊடாகவே முன்முதல் அனுபவங்களுக்குள் நாம் நுழைந்து நாம் யார் என்பதனையும் நாம் எதற்காக உருவாக்கப்பட்டுள்ளோம் என்பதையும் புரிந்து கொள்கின்றோம்.

## உடல் இறையியலும் திருமண உறவும்

இதுவரை திருத்தந்தை ஜோன் போல் உடைய உடல் இறையியல் பற்றிய முதல் தனிமை, முதல் ஒன்றிப்பு, முதல் நிர்வாணம் ஆகியவற்றை எடுத்தியம்பினார். உடல் பற்றி நாம் இவ்வாறு முன்பொருபோதும் அறிந்திருக்கவில்லை. திருத்தந்தை ஜோன்போல் அவர்கள் உடல் இறையியல் பற்றி அவரின் போதனைகளில் இயேசு எமக்கு "தொடக்கத்திலே" அனுபவங்களை படம்பிடித்துக்காட்டி எமது வருங்காலம் தொடர்பான நம்பிக்கையை ஊட்டுகின்றார். இந்த கருத்தியல்கள் வழியாக எமது வாழ்வு, எமது உறவுகள் ஆகியவற்றை நேர்மறையாக பார்க்க உதவுகின்றார். இந்த மூன்று முன்முதல் அனுபவங்களிலிருந்தும் முதற்பாவம் என்னும் அனுபவத்திலிருந்தும் மனித உடலானது குறியீட்டு இயல்புடையது, இனப்பெருக்க இயல்புடையது, சுதந்திரமானது, வீழ்ச்சியுற்றது ஆனால் மீட்கப்பட்டுள்ளது என்பதை அறிகிறோம். அத்தோடு மனிதஉடல் மனிதனின் முழுஆள்தன்மையை வெளிப்படுத்துகின்றது. என்பதனையும் நாம் குறியீட்டு இயல்புடைய படைப்புக்கள், எமது உடல்களால் அன்பு செய்ய அழைக்கப்படுகின்றோம். என்பதையும், எமது உடல்கள் அன்பைத்தவிர கீழான உணர்வுகளுக்கு படைக்கப்படவில்லை என்பதையும், எமது உடலானது பாலியல்பைவிட உறவுமுறைகளுக்கே உருவாக்கப்பட்டது. என்பதையும் உடல் இறையியல் கற்றுக்கொடுக்கின்றது. பாலுறவு என்பது முக்கியமானது என்கின்ற கருத்து மனிதஉறவுகள் அதிமுக்கியமானது என்கின்ற கருத்துண்மையிலிருந்து புறப்படுகின்றது. எங்கள் உடல்கள் பாவக்காயமுற்றிருக்கும் அதேவேளை பாவத்தில் இருந்து விடுதலையும் பெற்றிருக்கின்றன. இறுதியாக இயேசுகிறிஸ்துவின் மீட்புச்செயலால் எமது உடல் பற்றிய ஆழமான தெளிவினை பெற்றுள்ள நாம் எமது உடல்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. என்பதனை உடல்இறையியல் உறுதிப்படுத்துகின்றது. இயேசு கிறிஸ்துவை அறிவதும், அவரை அன்பு செய்வதும் ஒரு அனுபவமாகும். இந்த அனுபவத்தின் ஊடாகவே முன்முதல் அனுபவங்களுக்குள் நாம் நுழைந்து நாம் யார் என்பதனையும் நாம் எதற்காக உருவாக்கப்பட்டுள்ளோம் என்பதையும் புரிந்து கொள்கின்றோம்.

## உடல் இறையியலும் திருமண உறவும்

இதுவரை திருத்தந்தை ஜோன் போல் உடைய உடல் இறையியல் பற்றிய கருத்துக்களை ஆராய்ந்தோம். இந்த பகுதியில் அந்தக் கருத்துக்களின் ஒளியில் மனிதனின் திருமணம் மற்றும் அவனின் பாலியலின் அம்சங்களை ஆராய்வோம். இயேசுவிடம் பரிசேயர்கள் தொடுத்த திருமணம் அல்லது விவாகரத்து பற்றி கேள்விக்கு இயேசு "தொடக்கத்திலே" என்று குறியீட்டு முதல் மனிதனின் காலத்தில் நிலவிய திருமணம் மற்றும் பாலியல் பற்றிய இறைவனின் திட்டத்தை மேற்கோள் காட்டி பதிலளித்தார்.

இக்கேள்வி தொடக்கப்பட்ட இயேசுவின் காலத்தில் விவாகரத்து என்பது மிக பரவலாக காணப்பட்டது. அத்தோடு திருமணம் புரிவோரின் வீதம் மிகக்குறைவாக காணப்பட்டது. அதாவது திருமண உறவின் முறிவுப்படா தன்மையை மதிக்காமல் மணமுறிவை மிக இலகுவாக பெற்றுக்கொண்டனர். திருமண உறவை அவர்கள் மிக உன்னதமாக கருதாத ஒரு நிலையே காணப்பட்டது. யூதர்களிடையே இரண்டு விதமான கருத்துக்கூடங்கள் காணப்பட்டன. சம்மாய் "Shammai" என்கின்ற குழுவினர் எந்த காரணத்திற்கும் மணமுறிவு வழங்கும் நடைமுறையையும் ஹில்லல் "Hillel" என்கின்ற குழுவினர் எந்த காரணத்திற்கும் மணமுறிவு என்கிற கருத்தை எதிர்க்கின்றவர்களாகவும் இருந்தனர்.

அவ்வாறே திருமணம் உறவிற்கு உட்படாமல்

## ஏதேன்



ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டு வந்ததையும் கூறினார். "உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே மோசே இப்படி வழங்கினார்" என்ற இயேசு திருமணத்தின் உண்மையை சுட்டிக்காட்ட "தொடக்கத்திலே" இருந்த இறைவனின் திட்டத்தை பற்றி விளக்கினார். அதன்படி திருமண வாழ்வில் வரும் சிக்கல்களுக்கு மணமுறிவு என்பது ஒரு விடையல்ல என்பதை குறிப்பிட்டார். இயேசுவின் காலத்தில் பலஸ்தீனா உரோமையரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. உரோமை சமூகத்தில் திருமணம் செய்வோரின் வீதம் மிகக்குறைவாக இருந்தமையால் உரோமை அரசன் ஆண்கள் கட்டாயம் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்கிற கட்டளையையும் பிறப்பித்திருந்தான். ஆகவே திருமண உறவை மதிக்காத ஆண்கள், பெண்கள் எல்லோரும் மிக இலகுவாக திருமண உறவின்றி பாலியல் குற்றச்செயல்களை புரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்பது இதனால் புலனாகிறது. இந்த பின்னணியிலே இயேசு "தொடக்கத்திலே" என்கின்ற இறைவனின் உன்னத திட்டத்தை சுட்டிக்காட்டி அக்கால சமுதாயத்தில் இருந்த தீய நடைமுறைகளுக்கு சவாலாக போதித்தார். இயேசுவின் இந்த போதனைகளையே திருத்தந்தை ஜோன்போல் உரைக்கின்ற உடல் இறையியல் எமக்கு உணர்த்துகின்றது.

திருமணம் உடன்படிக்கையின் ஆழமான கருத்தியல்களையும் அதன் அம்சங்களையும் ஆராயும் போது பல்வேறு பாலியல் செயல்களில் அறநெறி தன்மைகளை எம்மால் விளங்கி கொள்ள முடியும். திருமணத்திற்கு முன்னரான பாலுறவு, இயற்கை குடும்ப திட்டமிடல், கருத்தடை, ஆபாசம், சுயஇன்பம், ஓரினச்சேர்க்கை ஆகியன அறநெறிக்கு முரணான செயல்கள் என உடல் இறையியலின் ஒளியில் நோக்கும் போது புலனாகிறது. இயேசுவின் காலத்தில் மணமுறிவும் விவாகரத்தும் மிகஇலகுவாக கடைப்பிடிக்கப்பட்டதையும், அதுபற்றி வினா எழுப்பிய பரிசேயர்கள் மோசே அதற்கு அனுமதி வழங்கியிருந்ததை ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டு வந்ததையும் கூறினார். "உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே மோசே இப்படி வழங்கினார்" என்ற இயேசு திருமணத்தின் உண்மையை சுட்டிக்காட்ட "தொடக்கத்திலே" இருந்த இறைவனின் திட்டத்தை பற்றி விளக்கினார். அதன்படி திருமண வாழ்வில் வரும் சிக்கல்களுக்கு மணமுறிவு என்பது ஒரு விடையல்ல என்பதை குறிப்பிட்டார். இயேசுவின் காலத்தில் பலஸ்தீனா உரோமையரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. உரோமை சமூகத்தில் திருமணம் செய்வோரின் வீதம் மிகக்குறைவாக இருந்தமையால் உரோமை அரசன் ஆண்கள் கட்டாயம் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்கிற கட்டளையையும் பிறப்பித்திருந்தான். ஆகவே திருமண உறவை மதிக்காத ஆண்கள், பெண்கள் எல்லோரும் மிக இலகுவாக திருமண உறவின்றி பாலியல் குற்றச்செயல்களை புரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்பது இதனால் புலனாகிறது. இந்த பின்னணியிலே இயேசு "தொடக்கத்திலே" என்கின்ற இறைவனின் உன்னத திட்டத்தை சுட்டிக்காட்டி அக்கால சமுதாயத்தில் இருந்த தீய நடைமுறைகளுக்கு சவாலாக போதித்தார். இயேசுவின் இந்த போதனைகளையே திருத்தந்தை ஜோன்போல் உரைக்கின்ற உடல் இறையியல் எமக்கு உணர்த்துகின்றது.



**திருமண உடன்படிக்கையும் மணமுறிவும்**

உடன்படிக்கை என்பது இரண்டு நபர்களிடையே நடைபெறும் ஒப்பந்தமாகும். பழைய ஏற்பாடு இறைவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையில் இடம்பெற்ற பல உடன்படிக்கைகளை பற்றி எடுத்து கூறுகின்றது. நோவா, ஆபிரகாம், மோசே ஆகியோரின் உடன்படிக்கையை பழைய ஏற்பாட்டில் வாசிக்கின்றோம். இந்த உடன்படிக்கைகள் இரக்கத்தை சான்றாக வைத்து அல்லது இரத்தத்தில் முத்திரை இடப்பட்டதாக இருக்கின்றன. இந்த உடன்படிக்கைகளில் உடன்படிக்கை செய்வோர் வெறும் பொருட்களை பயன்படுத்தி அல்ல மாறாக தங்களையே பரிமாறிக்கொண்டனர். இன்றும் இறைவன் நாம் அவரோடு செய்யும் உடன்படிக்கைகளில் தன்னை முழுமையாக எமக்கு தருகின்றார். நாமும் அவ்வாறே செயல்பட அழைக்கின்றார்.


தொடரும்...

இம்மாத மேற்கோள்கள் ஆபிரகாம் லிங்கனின் சிந்தனைகளிலிருந்து!

"எதிரியை அழிப்பதற்கு நான் கடைப்பிடிக்கும் வழி அவர்களை நண்பர்களாக்குவதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாவின் நினைவுகளுடன்...




வருட ஆரம்பமென்றாலே உன் நினைவு தானே அண்ணா
முதல் மாதம் முதல் திகதியில் பிறந்த நீ !
முதல் திகதியில் மறைவாய் என்று நினைக்கவில்லையே அண்ணா
நாமெல்லாம் மண்விளையாடிய காலத்தில் சண்டையும் சச்சரவும்
ஆனந்தமும் தானே அண்ணா அந்த
ஆனந்தம் இன்று கண்ணீராகி விட்டதே அண்ணா
காலம் எம்மை மாற்றுமென்று காத்திருந்தாலும்
இனிவரும் காலமெல்லாம் உன்நினைவு தானே அண்ணா முதல்
வாடகை வீட்டில் எடுத்த முதல்
போட்டோவில் மறையாத உன் புன்னகை இன்று மறைந்துவிட்டதே
அண்ணா நினைத்துப்
பார்க்கவில்லையே அண்ணா உன் இழப்பை
இறைவன் நினைத்ததை யார் அண்ணா மாற்ற முடியும்
ஆறுறவும் ஒன்றாய் அமர்ந்து
படித்து விளையாடிய
காலங்கள் பசுமரத்தாணியாய் உள்ளதண்ணா
பாசத்தை நீ வெளியிட்டதில்லை
ஆயினும் துளிகூட
உன்னிடம் வேசமில்லையே அண்ணா



பள்ளிப்பருவ நாட்களில் நீ படித்த பாடசாலைகளெல்லாம் இன்று நல்லதோர் பழைய மாணவனை
இழந்துவிட்டதண்ணா
குருத்துவத்தை தெரிவு செய்த நீ அதற்காயொரு போராட்டமே நடத்தினாயே அண்ணா வீட்டில்
வெற்றியும் பெற்றாயே அண்ணா
விடுமுறை எப்போ வரும் அண்ணா வீட்டிற்கு எப்போ வருவான் என்று ஏங்கிய காலங்கள் மறைந்து
இனி அண்ணா வரமாட்டான் என்று எண்ணுகையில் கண்ணீர் முட்டுகின்றதண்ணா
எப்போது போட்டோ எடுத்தாலும் வந்து நிற்க தயங்கமாட்டாயே அண்ணா
இன்று இத்தனை போட்டோக்களும் எடுக்கப்படுகின்றன
நீ தான் எழுந்து நிற்க மாட்டேன் என்கிறாய் அண்ணா
தனியே பயணம் செய்ய தயக்கம் காட்டிய நீ
ஏன் போனாய் என்று கேட்கமாட்டேன் அண்ணா பயணத்தை தவிர்த்திருக்கலாமே அண்ணா
அதிலும் இறைதிட்டம் இருக்கு என்று எண்ணி ஆறுதலடைய மறுக்குது அண்ணா மனசு
ஐம்பது வயது வரை வாழ்ந்து விட்டேன் இது போதுமென்று
ஏன் அண்ணா சொன்னாய்
இன்னும் பல வருடம் வாழ்வதில் அப்படியென்ன உனக்கு கஷ்டம்
இன்று எங்களை கஷ்டப்படுத்தி விட்டாய் தானே
இத்தனை உறவுகளை சேர்த்து வைத்தது உன் இறப்பிற்கா அண்ணா
எழுபத்தி இரண்டில் பிறந்து
இரண்டாயிரத்து இரண்டில் குருவாகி
இருபத்து இரண்டில் மறைந்து விட்டாயே அண்ணா
அடிபட்ட உடனே உன்னுயிர் பிரிந்திருந்தால் ஆனந்தம் தான் அண்ணா எமக்கு
உன் காவல் தூதர்கள் கூட
மரண தூதனுடன் ஒரு போராட்டமே நடத்தியிருப்பார்களோ அண்ணா

குருத்துவத்தை அடைய எத்துனை சிரமங்களை சந்தித்தாயென்று நாமறியாமல் இல்லை அண்ணா
பெற்ற குருத்துவத்தை
எத்துனை ஆழமாய் அன்பாய்
நேசித்தாயென்பதை உன் இறுதி ஊர்வலம் காண்பித்துவிட்டது அண்ணா
பாடசாலை நாட்கள் கடந்து சிறிய குருமடம் பெரிய குருமடம்
இந்தியாவில் படிப்பென்று பறந்து திரிந்தாயே
இன்று பறந்தே விட்டாய் அண்ணா
அளிகம்பையை நீ முதல் பங்காய் எடுத்து ஆண்டு இருபது கடந்துவிட்ட போதும்
உன் இறுதி பயணத்திற்கு இரண்டு பேருந்தில் வந்தார்கள் என்று எண்ணுகையில்
நீ அவர்கள் மேல் வைத்துள்ள அன்பின் ஆழம் தெரிகின்றதண்ணா
தொடர்ந்தும் நீ பெற்ற ஒவ்வொரு பங்கும் உன் பெயர் சொல்லுகின்றதே அண்ணா
சிறு வயதில் நீ நடக்க முடியாமல் சிரமப்பட்ட போது
கால்களுக்கு எண்ணெய் பூசி வாரவாரம் மாதா கோயில் தூக்கி
சென்ற அம்மா, மாமியின் கவலை அன்று நீங்கி,
இன்று அதிகரித்துவிட்டதே அண்ணா
வலது கை செய்வது இடது கைக்கு தெரியக்கூடாது என்பதை
உன் இறப்பின் பின் தான் கண்டோம் அண்ணா
இறுதியாய் நீ பெற்ற அன்புவழிபுரம் பங்கு மக்களின் ஆழம் உனக்கு தெரியவில்லையா?
அவர்களுக்கு கண்ணீரை பரிசாகக் கொடுத்துவிட்டாயே அண்ணா
இரண்டாயிரத்து பத்தொன்பதில் சென்னை விமான நிலையத்தில் மறையும் வரை நீ கை காட்டிச்சென்ற
உன் உருவம் தான் அண்ணா உன்னை நான் பார்த்த இறுதி தருணம்
கண்களில் கண்ணீரும் வற்றிவிட்டதண்ணா
இனிமேல் கண்ணீரை கடன் பெற்று தான் அழவேண்டும் அண்ணா
வாழ்த்து எழுதிய என்னை அஞ்சலி எழுத வைத்துவிட்டாயே அண்ணா
இதற்குமேல் இயலவில்லை அண்ணா
இறுதியாக
இன்று நீ ! நாளை நான்.



**தங்கை**
**கி. கியூரி (இந்தியா)**

# நானும்! என் உலகமும்...

முகத்தில் புன்னகையோடு வலம் வந்தவேளை
"கள்ளச் சிரிப்பு" என்றது.




கோபங் கொண்டேன்
"சிடுமூஞ்சி" என்றது.
அதிகம் பேசவில்லை
"ஊமை" என்றது.
கல கல வென்று பேசினேன்
"ஓட்டவாய்" என்றது.
புதிய விடயங்களை பரிமாறினேன்
"கருத்து கந்தசாமி" என்றது.
நல் வார்த்தைகளை ஆமோதித்தேன்
"ஜால்ரா" என்றது.
பணிகளில் முன்னின்று உழைத்தேன்
"முந்திரிக் கொட்டை" என்றது.
நல்லாரை பின்தொடர்ந்தேன்
"நடிப்பு" என்றது.



பெரியோருக்கு மரியாதை செய்தேன்
"ஏமாற்றுக்காரர்" என்றது.
தீயவரைத் தட்டிக் கேட்டேன்
"தலைக்கனம்" என்றது.
நல்ஆலோசனை வழங்கினேன்
"படித்த திமிர்" என்றது.
சுயமாக முடிவெடுத்தேன்
"அதிபுத்திசாலி" என்றது.
வேதனையில் கண்ணீர் விட்டு அழுதேன்
"வேஷக்காரர்" என்றது.
பிழையை எதிர்த்து கேள்வி கேட்டேன்
"வில்லங்கம் பிடித்தவர்" என்றது.
ஒதுங்கி இருந்தேன்
"பயந்தாங் கொள்ளி" என்றது.
உரிமைக்காக போராடினேன்
"கலகக்காரர்" என்றது.
எதற்கும் கலங்காமல் இருந்தேன்
"கல்நெஞ்சம்" என்றது.

நாலு பேர் என்ன
நினைப்பார்கள்......?
நாலு பேர் என்ன
பேசுவார்கள்......?
இதுவே வாழ்வாகி
போனது......?



யாரோ நாலு பேருக்காகவா வாழ்கின்றேன்
சற்றே நின்றேன்! சிந்தித்தேன்
என்னை நானே அணிந்து கொண்டேன்
துலங்கத் துவங்கியது
என் வாழ்வின் துளிர்கள்

"ஏமாற்றுவதைக் காட்டிலும் தோற்றுப் போவது மரியாதைக்குரியது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நினைவுகளில் என்றும் வாழும் அமரர் அருட்தந்தை G. நிதிதாசன் அடிகளார்



தாயின் மடியில் - 01. 01. 1972
இறை தந்தையின் உறவில் - 01. 03. 2022

தந்தை - அமரர் எம். கணேசப்பிள்ளை
தாய் - கணேசப்பிள்ளை பார்பரம்மாள்
சகோதரர் - இருவர்
சகோதரி - மூன்று பேர்

கற்றல் செயல்பாடு:
தரம் 1 - 9 வரை தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி
தரம் 10 - A/L மட்/ புனித மிக்கேல் கல்லூரி

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டமாக
இருந்த போது குருத்துவ பயிற்சிக்காக
புனித வளனார் சிறிய குருமடத்திலும் - மட்டக்களப்பு
மெய்யியல் - இந்தியா (மதுரை)
இறையியல் - கண்டி (தேசிய குருமடம்)
இடைக்காலப் பயிற்சி - மட்டக்களப்பு (நாவற்குடா)
மட்டக்களப்பு (தாண்டான் வெளி)
திருகோணமலை (புனித மரியாள் பேராலம்)
குருத்துவம் - 05.09.2002 திருகோணமலை புனித மரியாள் பேராலயம்



திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டமாக இருந்த போது மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் குருத்துவ திருநிலைப்படுத்தலின் பின்பு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் உதவிப்பங்குத்தந்தையாகவும், திருக்கோவில், தேவகிராமம் (அளிகம்பை) ஆகிய பங்குகளில் பங்குத்தந்தையாகவும் பணிபுரிந்தார். விஷேடமாக தேவகிராமம் (அளிகம்பை) பங்கில் மாணவர்களை கல்வியில் ஊக்குவித்து பல்கலைக்கழகத்திற்கு செல்லுமளவு வழியகாட்டிய பெருமையும் அருட்தந்தையையே சாரும். தனது 50 வயதில் 20 வருட குருத்துவப் பணிவாழ்வு வாழ்ந்தவராவார்.

திருகோணமலை மறைமாவட்டத்தில் அலஸ்தோட்டம், பாலையூற்று, ஆகிய பங்குகளின் பங்குத்தந்தையாகவும். பாலையூற்று பங்கிலிருந்து அன்புவழிபுரம் தனிப்பங்காக பிரிந்த போது அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயப் பங்கின் முதல் பங்குத்தந்தையாகவும் பணியாற்றிய பெருமையும் இவரையே சேரும்.

மேலும் J.R.S, மற்றும் E.H.E.D ஆகிய நிறுவனங்களில் இயக்குனராக சாதி, மதம், இனம், மொழி வேறுபாடுகளின்றி பணிபுரிந்தவராவார். மேலும் திருப்பாலத்துவ சபை, மரியாயின்சேனை, பொதுநிலையினர் ஆணைக்குழுக்களின் இயக்குனராகவும் இவரது பணி பல்வேறு நிலைகளில் பரந்து விரிந்து காணப்பட்டது. அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

## நான் நேசித்த தந்தை

அருட்தந்தை நிதி
நீர் பழகிய நாட்களும் காலங்களும்
பசுமையானது
ஏழை எளியவர்களை நேசித்தீரே
தேடி வருவோரை வாவென்று
வாயார வரவேற்பீரே
அழுவோரின் கண்ணீரை துடைத்து
ஆறுதல் வார்த்தைகள் கொடுப்பீரே
இனம், மதம், மொழி பாராது
அன்பினால் மக்களை அணைத்துக் கொண்டீரே
கோபம் என்பதை ஒரு போதும்
யாருடனும் பாராட்ட மாட்டீரே
சவால்களும் தடைகளும் வந்தாலும்
தூசாக தட்டி பயணம் செய்தீரே
மகிழ்வாரோடு மகிழ்வதும் அழுவாரோடு
அழுவதும் உம் அன்பில் ஒன்றே
எத்தனை மனிதர் வாழ்க்கையில் ஏணியாக இருந்தீர்
எண்ணிப் பார்க்கவே முடியலயே தந்தையே
இன்னும் உம்மிடம் வினாக்களை தந்து
எத்தனையோ உள்ளங்கள் விடைகாண
எதிர் பார்த்து கொண்டு இருக்கின்றார்களே
விடைகொடுக்காமலேயே விடைபெற்றுக் கொண்டீரே
தந்தை நிதி நீர் வாழ்ந்த வாழ்க்கையில்
அன்பின் ஆழம் நீர் சொல்லவில்லை இன்று நீர்
ஆழ்ந்த துயில் கொள்ளும் நிலை கண்டு
மக்களும் அவர்கள் கண்ணீரும் சொல்கின்றதே அதை
பார்ப்பதற்கும் கேட்பதற்றும் மௌனித்து விட்டீரே!
இடக்கை செய்வது வலக்கைக்கு தெரியாது
நீர் வாழ்ந்த வாழ்க்கை இன்று
உம் மரணத்தில் தெரிகிறதே
என் வாழ்வின் ஒளியை ஏற்றிவைத்த
அன்புத் தந்தை நிதியே
என்றும் எம் நீங்கா நினைவில்
உம் நினைவுகளோடு நாம்
தந்தையே ஐம்பது வருடமும் படைத்தவன் பராமரித்து விட்டு
பாதியில் உம்மை அழைக்கவில்லை
இவ்வுலக வாழ்வின் முழுமையை
அவர் கண்டு மகிழ்வின் அடையாளமாக
நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே
என உம் பெயரை சொல்லி அழைத்து
தம் இல்லத்தில் உம்மை மகிழ்வோடு
அரவணைத்து அவர் மகிழ்கிறார்.

P. சுபா



## அருட்பணியாளனே! நிதி தாசனே! ஆண்டவருக்குள் அமைதியாய் இளைப்பாறுவாய்!

தாயின் கருவறையில் மழை உனக்கு!
சேயின் வளர்ப்பில் பெற்றோர் அன்பு மழை உனக்கு!
நோயின் தாக்கத்தில் இரக்க மழை உனக்கு!
தாவீதின் மரபுவழி அருட்பொழிவும் உனக்கு!

குருவாகித் திருவாகி பணி தானும் தொடர்ந்தாய்!
உருவாகும் திரு அவைக்கு உரம் தானும் கொடுத்தாய்!
பருவம் பார்த்து பயன் ஏதும் பார்க்க மாட்டாய்!
பரிதவிப்போர் துயரம் பொறுக்க மாட்டாய்

நானிலத்தின் பார்வையிலே நீயும் ஒரு ஞானி!
ஞாலத்தின் பரிணமிப்பில் நீயும் தனிப் பாணி!
கோலத்தின் கொடூரத்தில் நீயும் தனிப் பயணி!
ஓலத்தின் உச்சத்தில் மாநிலத்தார் நாமிங்கே!



திரு அவை தோட்டத்து பணியாளர் பதைத்து நிற்க,
உன் உறவு பூக்கள் மணமிழந்து வதங்கி நிற்க,
உன் பாச வலைக்குள் அகப்பட்டோர் மௌனித்து உறைந்து நிற்க,
என் இதயத்தால் யாசிக்கிறேன், நீ இறைவனுக்குள் உறைந்து விட

அருட்பணியாளர், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள்,
புனித அந்தோனியார் ஆலயம், மூதூர்.

## அருட்பணி G. நிதிதாசன் அடிகளாரின் பணிவாழ்வில் அழியாத சில தழும்புகள்

ஆண்டவன் அழைப்பை ஆர்வமுடன் ஏற்று பற்பல சவால்கள், தடைகள் மத்தியில் எதிர்நீச்சல் போட்டு, 2002ம் ஆண்டு புரட்டாதி 5ம் நாள் குருத்துவ அபிஷேகம் பெற்றார். மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாக தமது பணியை ஆரம்பித்தார். தம் பணித்தளங்களில் எல்லோரது மனதிலும் குடிகொண்ட தந்தை நிதிதாசன் அடிகளார் அளிகம்பை கிராமத்தில் அவர் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய வேளையில் மக்களுடன் மக்களாக வாழ்ந்ததுடன் அவர்களை இன்று வரை நேசித்தும் வந்தார். சுனாமி பேரலை எற்பட்ட போது தந்தையின் பணிகளை இன்றும் மக்கள் பேசுமளவுக்கு பணியாற்றியுள்ளார்.

திருகோணமலை மறைமாவட்டத்தில் J.R.S கல்விப்பணியில் தம்மை ஈடுபடுத்திய காலத்தில் அப்பணியை சிறப்பாக செய்வதில் முழுமூச்சாக உழைத்தார். அத்தோடு இறையிரக்கத் திருத்தலத்திலும் பணிபுரிந்தார். தொடர்ந்து EHED Caritas திருகோணமலை மறைமாவட்டத்தில் இயக்குனராகப் பணிபுரிந்தார்.

பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தின் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்று உப பங்காகிய அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயத்தையும் நிர்வகித்து வரும் வேளை 2019. 10. 27 தொடக்கம் அன்புவழிபுரம் தனிப்பங்காக செயல்பட ஆயரின் அங்கீகாரம் கிடைத்தது. 03. 11. 2019ல் அன்புவழிபுரம் பங்கின் முதலாவது குருவாகப் பணிப்பொறுப்பேற்றார்.

"கண்டிப்பை விட அன்பே சிறந்த முடிவைத் தரும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வு சார்ந்த வழிபாடு - 12**

# பீடம்: இறையியலும், வாழ்வியலும்...

**அருட்பணி. ம. அலெக்சாண்டர் - இந்தியா**

நம் கத்தோலிக்க கோவில்களில் முதன்மையும், மையமுமான அடையாளமாய் பீடம் அமைந்திருக்கிறது. கோவிலின் கட்டிட அமைப்பே பீடத்தை நோக்கி இருக்கிறது. இது கோவிலில் நடைபெறும் அனைத்துச் செயல்களும் பீடத்தை நோக்கி ஒருமுகப்படுத்தப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. பீடத்தில் தான் இறை - மனித சந்திப்பில் ஒரு வியத்தகு பரிமாற்றம் நிகழ்கிறது.

மனித வரலாற்றின் தொடக்கமுதலே பீடம் இறை - மனித சந்திப்பின் இடமாக இருந்திருக்கிறது. இறைவனோடுள்ள உறவை பலிகள் வழியாக மனித இனம் அடையாளப்படத்தி, புதுப்பித்து, உறுதிப்படுத்தி வந்துள்ளது. பீடம் என்பது எபிரேயத்தில் 'மிஸ்பேயா' (mizbeah)என்றழைக்கப்படுகிறது. இதற்கு 'பலிப்பொருளை வெட்டும் இடம்' என்பது பொருள். பலியிடுவதன் வழியாக இறைவனின் பாதுகாப்பை, இரக்கத்தை, மன்னிப்பை, நோயற்ற நல்வாழ்வை மற்றும் வளமையை பெறமுடியுமென பீடத்தை அணுகிவந்தனர். கிரேக்க மொழியில் இது 'ஆகியாதெரியோன்' எனப்படுகிறது. இதற்கு 'பலியிடப்படும் இடம்' என்று பொருள். ஆனால், கிறிஸ்தவர்கள் பொதுவாக பயன்படுத்தும் சொல், 'ஆகியா ட்ரபேஸா' (Agia Trapeza) அதாவது 'புனித மேசை', 'பாமோஸ்' என்கிற வார்த்தையும் பயன்பாட்டில் இருந்தது. ஆனால் அது பிற கடவுளர் வழிபாட்டின் பலியிடத்தைக் குறிப்பிட பயன்படுத்தப்பட்டது. இதனையே இலத்தீனில் 'அல்தாரே' (Altare) என்றழைத்தனர். இதற்கு 'எரிக்கப்படும் இடம்' மற்றும் 'சற்றே உயர்த்தப்பட்ட இடம்' என்று பொருள்.

பழைய ஏற்பாட்டில் பீடம் என்பது இறைவனோடு கொண்டுள்ள உடன் படிக்கையின் அடையாளமாகவும், அதை உறுதிப்படுத்த எடுக்கும் முயற்சியாகவும் அமைந்திருந்தது. இறைவன் தன்னை வெளிப்படுத்திய இடங்களில் பீடங்கள் கட்டப்பட்டன. பெரும்பாலும் இவை மண்ணாலோ (விப 20:21 - 23), கற்களாலோ (இச 27:2-8), மரத்தாலோ, அல்லது உயர் வகை உலோகத்தாலோ செய்யப்பட்டிருந்தன. இறைவனின் பிரசன்னத்தையும், பாதுகாப்பையும், இறையாட்சியையும், இறைவனுடனான ஒன்றிப்பையும் குறித்துநின்றன.

புதிய ஏற்பாட்டில் பீடம் புதிய பொருள் பெறுகிறது. இயேசு தன்னையே பலியாக அர்ப்பணித்த சிலுவையை குறித்து நிற்கிறது. இயேசுவின் வார்த்தைகள் பீடத்தின் இறை பிரசன்னத்தை சுட்டிக் காட்டி (மத் 23:19) அதில் அர்ப்பணிக்கப்படுபவை இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதையும் குறிக்கின்றன. கிறிஸ்து தனது கல்வாரிப்பலியை நற்கருணைப் பலியாக உணவு மேசையில் கொண்டாடி பீடத்தை உணவின், உறவின் மேசையாக மாற்றினார். அத்தோடு கிறிஸ்துவே பலிப்பீடமாகவும் மாறி (எபி 13:10) இறைவனோடு நம்மை இணைக்கிறார். மேலும், பலிப்பீடம் விண்ணுலகைச் சார்ந்து அதனில் மாட்சியுடன் நிறைவு கொள்வதாக இருக்கிறது. (திவெ 6:9, 8:3-5, 11:1) கத்தோலிக்கக் கிறிஸ்தவ கோவிலின் பலிப்பீடங்கள் கிறிஸ்துவின் அடையாளமாகவும், விண்ணகப் பலிபீடத்தின் மேசையாகவும், காலியான கல்லறையின் அடையாளமாகும் இருக்கின்றன.

கத்தோலிக்கத் திரு அவையின் வரலாற்றில் கோவிலின் பீடம் பல கட்டங்களைத் தாண்டி இன்றைய நிலையை அடைந்திருக்கிறது. அதில் மிக முக்கியமான ஒருசிலவற்றைத் தெரிந்து கொள்வோம். தொடக்கத்தில் எளிமையான, புனிதப்படுத்தப்படாத, அலங்கரிக்கப்படாத சிறிய மேசை வெள்ளைத் துணியால் மூடப்பட்டு அப்பம் பிடுதலுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. கல்லறைச் சுரங்கங்களில் மறைசாட்சிகளின் கல்லறைகளின் மேல் (catacombs))திருப்பலி நிறைவேற்றப்படும் வழக்கத்தின் தாக்கத்தால் நாளடைவில் பீடம் கல்லறைபோல அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. 4ம் நூற்றாண்டிற்குப் பிறகு விலையுயர்ந்த கற்கள் கொண்டு பீடங்கள் அமைக்கப்பட்டு, ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டன. 9ம் நூற்றாண்டிற்குப் பிறகு புனிதர்களின் திருப்பண்டத்தை (Relics) பீடத்தில் வைக்கும் பழக்கம் தோன்றியது. இது தொடக்க காலத்தில் கல்லறைகளில் திருப்பலி நிறைவேற்றப்படும் வழக்கத்தின் நீட்சியாகவும், கிறிஸ்துவுக்காக வாழ்வையே பலியாக அர்ப்பணித்த புனிதர்கள் திருப்பலியில் கிறிஸ்துவோடு இணைந்து தங்களை அர்ப்பணிப்பதாகவும் புரிந்துகொள்ளப்படுகிறது.

அதைத்தொடர்ந்து காலப்போக்கில் தூயகம் அழகு செய்தல், நற்கருணைப் பேழை சுவரோடு ஒட்டியபடி பீடம், விளக்குத் தண்டுகள், திருப்பண்டப் பேழைகள், மன்றாட்டுகள் பொறிக்கப்பட்ட தகடுகள், தூயகத்தை பிரிக்கும் தடுப்பு என பல பொருட்கள் பீடத்தோடு இணைந்து பலிப்பீடத்தின் முக்கியத்துவத்தையும், அதன் உண்மைப் பொருளையும் கொஞ்சம் கொஞ்சமாய் குறைத்தன. 20ம் நூற்றாண்டின் சீர்திருத்தங்களால் பீடம் தனது முதன்மைத்துவத்தை திரும்பப் பெற்றது. "பீடத்தின் மீது அடையாள முறையில் சிலுவைப்பலி நிறைவேற்றப்படுகின்றது. பீடம் ஆண்டவரின் திருவிருந்து மேசையும் ஆகும்... புனித இடத்தில் பீடத்தின் மீது திருப்பலி நடைபெறும்... ஒவ்வொரு கோவிலிலும் அசையாப் பீடம் இருப்பது நல்லது ஏனெனில் அது உயிருள்ள கல்லாகிய (1 பேதுரு 2:4, எபே 2:20) இயேசு கிறிஸ்துவை மிகத் தெளிவாகவும் நிரந்தரமாகவும் குறிக்கின்றது." (GIRM 296,297,298)

பீடம் கிறிஸ்மா எண்ணெயால் பூசப்படுவதால் கிறிஸ்துவின் அடையாளமாகிறது. 'கிறிஸ்து' என்பதற்கு 'திருப்பொழிவு பெற்றவர்' என்பது பொருள். ஏனெனில் தந்தை இறைவன் அவரை தூய ஆவியாரால் திருப்பொழிவு செய்து குருவாக ஏற்படுத்தினார். அவரே தம் உடலாகிய பீடத்தின் மீது அனைவருடைய மீட்புக்காகவும் தமது உயிரைப் பலியாக ஒப்புக்கொடுத்தார். (கோவிலையும், gPj i j Ak;Neuej s þFk;rl q F>RDCA, முன் குறிப்புகள், எண் 16") எனவே திருப்பொழிவு செய்யப்பட்ட பீடம் கிறிஸ்துவின் அடையாளமாய் இருக்கிறது.

கிறிஸ்துவின் பலி நறுமணம் வீசும் புகைபோல இறைவன் திருமுன் எழுவது போல, இறைமக்களின் மன்றாட்டுகளும் இறைவனுக்கு உகந்தனவாயும், மகிழ்ச்சியளிப்பனவாயும் அவர் திருமுன் எழுவதைக் குறித்துக்காட்டவே தூபமிடப்படுகிறது. கோவிலையும் பீடத்தையும் நேர்ந்தளிக்கும் சடங்கில் தூபமிடும்போது இவ்வாறு மன்றாடப்படுகிறது: "ஆண்டவரே, எங்கள் மன்றாட்டு தூபம் போல் உம் திருமுன் எழுவதாக இந்த இல்லத்தில் நறுமணம் நிறைவதுபோல் திருஅவையில் கிறிஸ்துவின் நறுமணம் கமழ்வதாக" (RDCA. 66) எனவே, பீடம் இறைமக்களின் மன்றாட்டுகளும் இறைவனின் அருளும் சந்திக்கும் இடம்.

பீடம் ஆண்டவருடைய மேசையாக, பலியான கிறிஸ்துவின் உடலையும், இரத்தத்தையும் தெய்வீக உணவாகத் தந்து ஊட்டமளிக்கிறது. இறை மனித ஒன்றிப்பின் மையமாகத் திகழ்கிறது. எனவே தான் கோவிலையும் பீடத்தையும் நேர்ந்தளிக்கும் செபத்தில், "... இந்தப் பீடத்தையும் விண்ணக கொடைகளால் நிரப்பிப் புனிதமாக்கும்... இப்பீடமும் கிறிஸ்துவின் பலிக்கு ஏற்றதாக என்றும் இருப்பதாக, இங்கே இறையருட்பெருக்கு மனிதரின் பிழைகளைப் போக்குவதாக. இதனால் பாவத்தால் உயிரிழந்த மக்கள் மீண்டும் அருள்வாழ்வு பெற்று புதுப்பிறப்படைவார்களாக. இங்கே இறைமக்கள் திருப்பீடத்தைச் சுற்றிநின்று பாஸ்கா நினைவுப் பலியைக் கொண்டாடுவார்களாக கிறிஸ்துவின் வார்த்தையாலும் திருவுடலாலும் ஊட்டம் பெறுவார்களாக..." என்று ஆயர் மன்றாடுகிறார்.(RDCA. 62)

இவ்வளவு முக்கியமான பீடத்தை தகுந்த மரியாதையோடு அணுக வேண்டுமென திரு அவை கற்பிக்கிறது. ஒவ்வொரு முறையும் பீடத்தை அணுகும் போதும், திருவழிபாடு நடைபெறாதபோதும் கோவிலில் பீடத்தைக் கடந்து செல்லும் போதும் உரிய வணக்கம் செலுத்த வேண்டுமென அறிவுறுத்துகிறது. எனவே தான் பீடத்துக்கு தாழ்ந்து பணிந்து வணக்கம் செலுத்தப்படுகிறது. அருள்பணியாளரால் முத்தமிடப்படுகிறது தூபம் காட்டப்படுகிறது. பீடத்தின் மீது வெண்ணிறத்தில் பீடத்துகில் விரிக்கப்பட்டிருப்பது கிறிஸ்துவை அத்துணியால் உடுத்தியுள்ளதாய் கருதப்படுகிறது. பெரிய வியாழனன்று பீடத்தின் துணி அகற்றப்படுவது, இயேசு ஆடைகளையப்பட்டு வெற்றுடம்பாய் பலியானதையும், முழுதற்கையளிப்பையும் சுட்டி நிற்கிறது.

கோவிலின் பீடம் கிறிஸ்துவின் அடையாளம், கிறிஸ்துவின் கல்லறை, கல்வாரியின் சிலுவை, இறைமனித சந்திப்பின் இடம், ஆண்டவரின் மேசை... என்பதை உணர்வது மிக முக்கியம். ஒவ்வொரு திருப்பலியிலும் கிறிஸ்துவே "குருவாகவும், பலிப்பீடமாகவும், செம்மறியாகவும்" (பாஸ்காவின் தொடக்கவுரை V, உரோமைத் திருப்பலி நூல்) விளங்குகிறார். இந்த மேன்மையான நிலையை உணரும் போது பலிப்பீடத்தை உரிய வணக்கமுடன் அணுகுவோம். "பீடத்தின் மீது திருப்பலிக் கொண்டாட்டத்துக்குத் தேவைப்படுபவற்றை மட்டும் வைக்கலாம். அவையாவன கொண்டாட்டத்தின் தொடக்க முதல் நற்செய்தி அறிவிப்பு வரை நற்செய்தி வாசக நூல், காணிக்கைப் பொருள்களை ஒப்புக்கொடுத்தல் முதல் திருக்கலங்களைத் தூய்மைப்படுத்தும் வரை திருக்கிண்ணமும் திரு அப்பத்தட்டும், தேவைப்படின் நற்கருணைக் கலம், திருமேனித் துகில், திருக்கிண்ணத் துகில், திருக்கிண்ண அட்டை, திருப்பலி நூல் ஆகியவை. அருள் பணியாளரின் குரலைப் பெருக்கிக் கொடுப்பதற்காக ஒலிவாங்கிகள் ஏற்ற வகையில் அமைக்கப்படும்" மேற்குறிப்பிட்டவைகள் கூட திருப்பலியின் போது அந்தந்த நேரத்தில் தேவைப்பட்டால் மட்டுமே வைக்கலாம். அப்படியானால், பிற நேரங்களில் பீடம் துகில் போர்த்தப்பட்டு வெறுமையாய் இருக்க வேண்டும். பல இடங்களில் பீடத்தை வசதியான மேசை போல அறிக்கைப் புத்தகம், நோட்டீஸ்கள், தண்ணீர் புட்டிகள் போன்றவை வைக்கும் இடமாக பயன்படுத்துவது வேதனைக்குரியது. அதேபோல், 'அலங்கரிக்கிறேன்' என்ற பெயரில் பீடத்தையே மறைப்பது அல்லது பீடத்தில் நிகழ்பவை இறைமக்களுக்கு சரியாக தெரியாதபடி தடுக்கும் மலர்கள் மற்றும் அலங்காரங்கள் அனைத்தும் பீடத்தின் மதிப்பையும் மாண்பையும் குலைக்கின்றன. "பீடத்தை அணிசெய்வது மிதமான அளவோடு இருக்க வேண்டும்"

பலிப்பீடங்களின் மேன்மை நம்மையும் அதுபோல வாழ அழைக்கின்றது. எப்படி கோவிலின் இதயமாய் பலிப்பீடம் அமைந்திருக்கிறதோ, அதேபோல ஒவ்வொரு நம்பிக்கையாளரின் இதயமும் பலிப்பீடமாக மாறவேண்டும். நம் அன்றாட வாழ்வை 'உயிருள்ள பலியாக' (உரோ 12:1) இறைவனுக்கு அர்ப்பணிக்க நம் இதயங்களே பலிப்பீடங்களாக வேண்டும். அதேபோல தேவையில் இருக்கும் சகோதர சகோதரிகள் இறைவனின் உயிருள்ள பீடங்கள் என்று 'திருத்தூதர்களின் படிப்பினைகள்' என்னும் மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த நூல் குறிப்பிடுகிறது. "உங்களிடையேயுள்ள அனாதைகள், ஆதரவற்றோர், விதவைகள் ஆகியோரை இறைவனின் பலிப்பீடமாக கருதுங்கள்... பலிப்பீடம் ஒவ்வொரு நம்பிக்கையாளரின் வீட்டிற்கும் சென்றும் தனக்குத் தேவையானதைப் பெறுவதில்லை. மாறாக நம்பிக்கையாளர்களே பீடத்தை தேடி வந்து சேவை செய்ய வேண்டும். அதுபோல, உயிருள்ள பலிப்பீடங்களாகிய அனாதைகள், ஆதரவற்றோர், விதவைகளைத் தேடிச் சென்று சேவை செய்யுங்கள்" (Didascalia Apostolorum, III,VI, 3,191)) பலிப்பீடத்தில் அர்ப்பணிக்கப்படுவது இறைவனைஅடைவது போல ஆதரவற்றோர்க்குக் கொடுப்பது இறைவனை அடைகிறது. "ஏழைக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்: அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்துவிடுவார்" (நீ மொ 19:17)

பலிப்பீடத்தை உரிய வணக்கத்துடன் அணுகுவோம் நம் மன்றாட்டுக்களை நறுமணப் புகைபோல இறைவன் திருமுன் எழுப்புவோம் கிறிஸ்துவோடு இறந்து உயிர்த்தெழுவோம். அவரது உடலாலும் இரத்தத்தாலும் ஊட்டம் பெறுவோம். நம்மையே உயிருள்ள பலியாக்குவோம் தேவையில் இருப்போர்க்கு நம்மாலானதைச் செய்து இறைபலி செலுத்துவோம்.

தொடரும்...

"முன்னேற வேண்டும் என்று விரும்பினால் யாருடனும் சண்டை போடாதீர்கள், அதில் நேரம் வீணாகிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றை ஆக்கியோர் – 03



1809 ஆம் ஆண்டு பெப்ரவரி 12ம் திகதி அமெரிக்காவின் கெண்டக்கியில் ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்தார் ஆபிரகாம் லிங்கன். அவரது தந்தை தாமஸ் லிங்கன் ஒரு தச்சர் தாயார் நான்சி ஹாங்க்ஸ். குடும்ப ஏழ்மை காரணமாக லிங்கனால் சரியாக படிக்க முடியவில்லை. பிறருக்கு உதவி செய்தல், அடுத்தவர் மீது அன்பு செலுத்துதல், கலகலப்பாகப் பழகுதல், கதை சொல்லுதல், வேடிக்கையாகப் பேசுதல் போன்ற குணங்கள் சிறுவயதிலேயே லிங்கனிடம் இருந்தது. ஒருமுறை லிங்கன் நியூ ஆர்லியன்ஸ் என்ற நகரத்திலுள்ள சந்தைக்கு சென்றிருந்தார். அங்கே ஒரு நீக்ரோ பெண் அடிமையாக விற்கப்படுவதை கண்டார். அடிமைகள் என்ற பெயரில் கறுப்பினத்தவர்கள் விற்கப்படுவதையும் இருப்புக் கம்பிகளால் கட்டப்பட்டிருப்பதையும் சாட்டையால் அடிக்கப்படுவதையும் ஒட்டுமொத்தமாகக் கொடுமைப்படுத்தப்படுவதையும் கண்டார். இந்தக் கொடுமைக்கு முடிவு காண வேண்டும் என்று லிங்கன் விரும்பினார். அதற்கான வழிமுறைகளைக் கண்டறிய முற்பட்டார். தனது 23வது வயதில் முதன் முதல் ஆபிரகாம் லிங்கன் பிளாக்காக் போரில் கலந்து தலைவராக பணியாற்றியது அவருக்கு புதியதோர் பாதையை காட்டியது. அதன்பிறகு அவர் தாமாகவே படித்து வழக்கறிஞர் ஆனார். 1847 - 1849 ஆண்டுகளில் அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினராக பணிபுரிந்தார். அரசியலில் ஈடுபடுவதன் மூலமே அடிமைத்தனத்தை ஒழிக்க முடியும் என்ற முடிவுக்கு லிங்கன் வந்திருந்தார். 1834ஆம் ஆண்டு தமது 25ஆவது வயதில் முதன்முதலாக இலினோய் மாநில சட்டமன்றப் பதவிக்கு போட்டியிட்டு வெற்றிபெற்றார். பொது மக்களிடம் அவர் செய்த பிரச்சாரம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது முடிவில் லிங்கன் வெற்றி பெற்றார். அடுத்து அமெரிக்க செனட்டுக்கு தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் மிகப் பிரபலமான நீதிபதி ஒருவர் போட்டியிட்டார். அந்த நீதிபதியை லிங்கன் எதிர்த்து நின்றார் இந்தத் தேர்தலின் வெற்றியை அமெரிக்க மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். தேர்தல் முடிவு லிங்கனுக்கு சாதகமாக அமைந்தது. முதன் முதலாக லிங்கன் அமெரிக்க செனட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகு அரசியலைவிட்டுவலகி 5 ஆண்டுகள் தனியார் துறையில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1854ல் லிங்கன் மீண்டும் அரசியலில் நுழைந்தார் குடிப்பழக்கம், புகைக்கும் பழக்கம் எதுவும் இல்லாத லிங்கன் அரசியலில் கடுமையாக உழைத்தார். 1860ஆம் ஆண்டு அமெரிக்காவின் 16ஆவது அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவியேற்ற இரண்டே ஆண்டுகளில் அதாவது 1862ல் அவர் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் திகதியிலிருந்து அனைத்து அடிமைகளும் விடுவிக்கப்படுவர். அதன்பின் அமெரிக்காவில் அடிமைத்தனம் இருக்கக்கூடாது என்று பிரகடனம் செய்தார். 1863ல் லிங்கன் ஆற்றிய கெட்டிச்பெர்க் (Gettysburg Speech) பேருரையில் "விடுதலை உணர்ச்சி மிக்க ஐக்கிய அமெரிக்காவை பாதுகாப்பதற்கே இந்த உள்நாட்டுப்போர் நடத்தப்படுகிறது. எல்லா மாந்தரும் சமத்துவ நிலையில் படைக்கப்பட்டவர் எனும் உன்னத வாசகம் மேற்கொள்ளப்படுகிறது. "மக்களுக்காக அரசாங்கம், மக்களுடைய அரசாங்கம், மக்களால் ஆளப்படும் அரசாங்கம் என்னும் வாக்கு மொழிகள் அழிந்து போகாது" எனக் குறிப்பிட்டார்.

## ஆபிரகாம் லிங்கன்



"மக்களால், மக்களுக்காக நடத்தப்படுவதே மக்களாட்சி" என்பது ஆபிரகாம் லிங்கனின் மிகப் புகழ்பெற்ற மக்களாட்சி குறித்த விளக்கம் ஆகும். லிங்கனின் சீர்திருத்தக் கருத்துக்களும், மக்களாட்சித் தத்துவமும், அடிமைத்தன ஒழிப்பும் அடித்தட்டு மக்களிடம் எழுச்சியை உண்டாக்கியது. 1864ஆம் ஆண்டு நிகழ்ந்த தேர்தலில் 4 வாக்குகள் மிகையாக பெற்று இரண்டாம் தடவையாக ஜனாதிபதியாக லிங்கன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஒரு மாதத்தில் போர் நின்றது. உள்நாட்டில் போரில் வெற்றி பெற்ற தென்பகுதி மாநிலங்களில் போர் தளபதி ராபர்ட் லீ வடபகுதி இராணுவ தளபதி கிரான்ட் முன்பு சரணடைந்த அதே ஆண்டு இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராக தேர்வுபெற்றார் லிங்கன். 1856ஆம் ஆண்டு ஏப்ரல் 14ம் திகதி பெரிய வெள்ளிகிழமையன்று தனது மனைவியுடன் "அவர் அமெரிக்கன் கசின்" என்ற நாடகம் பார்க்க சென்றிருந்தார் லிங்கன். அவர் நாடகத்தை ரசித்துக்கொண்டிருந்த போது ஜான் வில்ஸ் பூத் என்ற ஒரு நடிகன் அதிபர் லிங்கனை குறிவைத்து சுட்டான். மறுநாள் காலை 56 வயதான லிங்கனின் உயிர் பிரிந்தது பிரிந்து போன வட தென் அமெரிக்க மாநிலங்கள் மீண்டும் ஒன்று சேர்ந்தன. தென்பகுதி அமெரிக்க அடிமைக் கறுப்பருக்கு எல்லாம் விடுதலை கிடைத்தது. ஆனால் வரலாற்று முக்கியத்துவம் உள்ள அந்த மகிழ்ச்சிகரமான வெற்றியை கண்டுகளிக்க அவற்றின் ஆக்க மேதையான ஆபிரகாம் லிங்கன் அப்போது உயிரோடு இல்லை. லிங்கனின் படுகொலையினால் அவர் அமெரிக்க மக்களால் "ஒரு தேசியத் தியாகி" என மரியாதை செய்யப்படுகிறார். அடிமைத்தனத்தை ஒழிக்கப் போராடியதால் மக்களால் அவர் ஒரு சிறந்த சுதந்திரப் போராளியாக வணங்கப்படுகிறார். அமெரிக்காவில் லிங்கனது நினைவாக அவரது பெயரில் பல நினைவு இல்லங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் பல சிறிய மற்றும் பெரிய நகரங்களுக்கு இவரது பெயர் இடப்பட்டுள்ளது. லிங்கனின் முதல் சிலையும் பொது நினைவுச்சின்னமும் அவரது படுகொலைக்கு மூன்று ஆண்டுகளுக்கு பின்பு வாசிங்டன் டி.சி யில் 1868ல் உருவாக்கப்பட்டது.

## மட்டக்களப்பு மறைமாவட்ட புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்லூரியின் முதலாவது டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

2018ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பொது நிலையினருக்கும் மற்றும் துறவிகளுக்குமான முதலாவது இறையியல் கல்லூரி ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறுங்கால விரிவுரைகளுடன் தொடங்கிய இக்கற்கை நெறியானது அதே ஆண்டு செப்டம்பர் மாதம் 9ம் திகதி உத்தியோக பூர்வமாக இறையியல் கல்லூரியாக ஸ்தாபிக்கப்பட்டது. இவ் இறையியல் கல்லூரி உரோமை உர்பானியா பல்கலைக்கழகத்தின் கல்வி அனுசரணையுடன் இயங்குகின்ற, கொழும்பு புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்லூரியின் மறைமாவட்ட கிளையாகும்.

இதன் முதலாவது தொகுதியாக 47 பயிலுனர்கள் கடந்த 4 வருடங்களாக குறுங்கால விரிவுரை மற்றும் கிறிஸ்தவ கற்கை நெறியில் டிப்ளோமா கல்வியினை பூர்த்தி செய்து, கடந்த 2021.11.27 ம் திகதி எமது டிப்ளோமா இறுதியாண்டு பரீட்சையினை பூர்த்தி செய்துள்ளனர். பரீட்சை எழுதிய 47 பயிலுனர்களும் சித்தியடைந்ததுடன் அதில் 5 பியிலுனர்கள் விஷேட சித்தியினையும் (Distinction) பெற்றுள்ளனர். இந் நிகழ்வு உண்மையிலேயே எமது மறைமாவட்டத்தின் மறக்க முடியாத நிகழ்வு மாத்திரமின்றி மாபெரும் சாதனை என்றே குறிப்பிடலாம்.



டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வானது 2022.01.22 (சனிக்கிழமை) காலை 9.00 - 10.30 மணி வரை "ஆயர் இல்ல சாள்ஸ் மண்டபத்தில்" எமது கல்லூரி அதிபர் அருட்பணி ஜோர் ஜீவராஜ் அடிகளாரின் தலைமையிலும், எமது மறைமாநில ஆயர் அதி. வணக்கத்திற்குரிய ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களின் ஆசியுடனும், விரிவுரையாளர்கள், அருட்தந்தையர்கள் மற்றும் பயிலுனர்கள் அனைவரின் உதவியுடனும் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. அத்தோடு டிப்ளோமா பரீட்சையில் சித்தி எய்திய பயிலுனர்கள் இவ்வருடம் ஒக்டோபர் மாதம் (Degree) கிறிஸ்தவ கற்கை நெறியினை எதிர்கொள்ள இருக்கின்றனர். மேலும் இவ் டிப்ளோமா கற்கை நெறி, பரீட்சை மற்றும் சான்றிதழ் பெறும் நிகழ்வு இவை அனைத்திலும் எமக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வழிகாட்டிய எமது மறைமாநில அதி. வணக்கத்திற்குரிய ஆயர் அவர்களுக்கும், கல்லூரியின் அதிபர் அவர்களுக்கும், அனைத்து விரிவுரையாளர்களுக்கும், அருட்சகோதரர் டிலோயிசன் பெர்ணான்டோ அவர்களுக்கும் மற்றும் இக்கற்கை நெறிக்கு சிபாரிசு செய்த எங்களது அனைத்து பங்குத் தந்தையர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் 3ம், 2ம் மற்றும் 1ம் ஆண்டு கற்கை நெறிகளில் 100ற்கும் மேற்பட்ட பயிலுனர்கள் ஏற்கனவே உள்வாங்கப்பட்டுள்ளனர் என்பதை அறியத்தருவதோடு இதில் ஆர்வமுள்ளவர்கள் தாமதிக்காது எமது இறையியல் கல்லூரியில் இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விமலநாதன் சரணியா - 4ம் ஆண்டு
புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி
மட்டக்களப்பு

## நன்மை செய்யவேண்டும் என்ற மனம் இருந்தால் அதற்கு ஆயிரம் வழி

போகும் வழியில் ஒரு மின்கம்பத்தில் ஒரு சிறு துண்டு காகிதம் எழுதி விடபட்டிருந்தது. அப்படி என்னதான் அதில் எழுதியிருக்கு என்ற ஆர்வத்தில் நானும் போய் படித்தேன். அதில் "என்னுடைய 50 ரூபாய் தொலைந்து விட்டது. யார் கையிலாவது கிடைத்தால் தயவு செய்து இந்த விலாசத்தில் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். எனக்கு கண் பார்வை அவ்வளவு சரியில்லை" என்று விலாசத்துடன் எழுதியிருந்தது. எனக்கு பொழுது போகவில்லை, அந்த குறுக்கு வழியில் பார்த்த ஒரு நபரிடம் விலாசம் கூறி வழி கேட்டேன். "இந்த அம்மாவா, கொஞ்சம் தூரம் போனால் ஓர் பழைய வீடு இருக்கும். அங்க தான் அந்த கண் தெரியாத அம்மா இருக்கு"



அங்கே ஓர் சிறிய கீத்து கொட்டகை ஒரு நாள் மழைக்கு கூட தாங்காது. வெளியில் கண்கள் குழி விழுந்து, எலும்பும் தோலுமாக வயதான ஓர் அம்மா என் காலடி சத்தம் கேட்டதும், யாருப்பா நீ? அம்மா நான் இந்த வழியாக வந்தேன் எனக்கு 50 ரூபா கீழே விழுந்து கிடைத்தது. அது உங்களிடம் தரலாம் என்று வந்தேன். கேட்டதும் அந்த அம்மா அழ ஆரம்பித்து விட்டார். தம்பி கிட்டத்தட்ட முப்பது முப்பத்தைந்து பேர் வந்து 50 ரூபா கீழே விழுந்து கிடைச்சது என்று சொல்லி குடுத்துட்டு போறாங்க... அந்த கடிதம் நான் எழுதல எனக்கு எழுத படிக்க தெரியாது. பரவாயில்ல அம்மா நீங்க வச்சிக்கிங்க என்று சொல்லி கொடுத்து திரும்பினென். தம்பி நீ போகும் போது மின்கம்பத்தில் இருக்கும் அந்த கடிதத்தே மறக்காமல் கிழித்து போட்டு விடு என்று அறிவுரைத்தாள் அந்த தாய்




என் மனதில் வித விதமான எண்ணங்கள். யார் அந்த கடிதத்தை எழுதி இருப்பார். அந்த கடிதத்தை கிழித்து விடு என்று அந்த அம்மா ஒவ்வொருவரிடமும் கூறிக் கொண்டுதான் இருப்பார். ஆனால் யாரும் அப்படி செய்யவில்லை. யாரும் இல்லாமல் அனாதையாக வாழும் ஓர் உயிருக்கு கடித வடிவில் உதவி செய்த அந்த நண்பருக்கு மனதால் நன்றி சொல்லி கொண்டேன். நன்மை செய்யவேண்டும் என்ற மனம் இருந்தால் அதற்கு ஆயிரம் வழி.

மனதில் யோசித்துக் கொண்டே வரும்போது வழியில் ஒருவர் என்னிடம் அண்ணா இந்த விலாசம் எங்கே என்று சொல்ல முடியுமா? கீழே இருந்து 50 ரூபாய் கிடைத்தது. அந்த அம்மா கிட்டே குடுக்கணும் வழி சொல்றீங்களா? கண்கள் பனித்தன மனித நேயம் சாகவில்லை...

"உழைப்பின் சக்தியே உலகில் மிக உன்னதமானது அதை வெற்றி கொள்ளும் ஆற்றல் வேறெந்த சக்திக்கும் கிடையாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித லூக்க நற்செய்தி
## 01 – 04 அதிகாரங்கள்

- ♦ எல்லோரும் பங்குபற்றலாம்
- ♦ போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- ♦ அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- ♦ பரிசுகள் முறையே 1ம் பரிசு 500/= 2ம் பரிசு 300/= 3ம் பரிசு 200/=

**கேள்வி பதில்**

1. இயேசு எந்த தொழுகைக் கூடங்களில் நற்செய்தியைப் பறைசாற்றி வந்தார்?
விடை :..........

2. ஏரோது எந்தப் பகுதிக்கு குறுநில மன்னராக இருந்தார்?
விடை :..........

3. ஆண்டவருடைய திருச்சட்டப்படி எல்லாவற்றையும் செய்து முடித்த பின்பு அவர்கள் கலிலேயாவிலுள்ள எந்த ஊருக்குத் திரும்பிச் சென்றார்கள்?
விடை :..........

4. குழந்தையாயிருந்த யோவான் எந்த மக்களுக்கு தம்மை வெளிப்படுத்தும் காலம் வரை பாலைநிலத்தில் வாழ்ந்து வந்தார்?
விடை :..........

5. எந்த நாட்டில் குரேனியு ஆளுனராக இருந்தார்?
விடை :..........

**சரி, பிழை எழுதுக.**

6. வயல்வெளியில் இடையர்கள் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். ( )

7. ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரை கடவுள் யோசேப்பிடம் அனுப்பினார். ( )

8. பதினைந்தாம் ஆண்டில் பொந்தியுபிலாத்து ஆளுனராக இருந்தார். ( )

9. இயேசு தம் பணியைத் தொடங்கிய போது அவருக்கு வயது ஏறக்குறைய நாற்பது. ( )

10. இறைவாக்கினர் எரேமியாவின் சுருளேடு இயேசுவிடம் கொடுக்கப்பட்டது. ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. உன் கடவுளாகிய __________ வணங்கி அவர் ஒருவருக்கே __________

12. இயேசு __________ ஆட்கொள்ளப்பட்டு __________ ஆற்றைவிட்டுத் திரும்பினார்.

13. __________ அடைய மனம்மாறித் __________ பெறுங்கள்.

14. இதோ இக்குழந்தை __________ மக்களுள் பலரின் __________ எழுச்சிக்கும் காரணமாக இருக்கும்.

15. நம் __________ நம்மை வெறுப்போர் அனைவரின் __________ நம்மை மீட்பார்.

பெயர் :..........
முகவரி :..........
பங்கு :..........

**முடிவுத்திகதி 15.04.2022**

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி – 49
## திருப்பாடல் 61 – 90

1. வரவிருக்கும் தலைமுறைக்கு எவற்றை எடுத்துரைப்பார்?
விடை :..........
..........

2. எவற்றினால் அம்புபோல் எய்கின்றார்கள் சொல்லுங்கள் பார்ப்போம்?
விடை :..........

3. ஆண்டவர் யாருடைய விண்ணப்பத்திற்கு செவிசாய்க்கின்றார்?
விடை :..........

4. எவை பொழிந்தது? எவை முழங்கியது? எவை பறந்தது?
விடை :..........
..........

5. உம் மக்களை மந்தையென அழைத்துச் சென்றவர்கள் யார்?
விடை :..........

6. தம் திருத்தலத்தை எவற்றைப் போல் அமைத்தார்?
விடை :..........

7. உமது பாதுகாப்பில் தஞ்சம் புகுவேன் எவற்றில்?
விடை :..........

8. என் நாவில் உள்ளது எது? நாளெல்லாம் பேசுவது எவை?
விடை :..........

9. நாள்தோறும் இவைகளை நிறைவேற்றுவேன் எவைகளை?
விடை :..........

10. சராசரி வாழ்நாள் எத்தனை ஆண்டுகள்? வலிமை மிகுந்தோர்க்கு எத்தனை ஆண்டுகள்?
விடை :..........

11. குற்றத்திற்கான தண்டனை அது? தீச்செயலுக்கு தண்டனை இது?
விடை :..........

12. __________ உமது பெயரை ஏத்துவேன்.

13. அவர்கள் __________ அவர் பார்வையில் விலைமதிப்பற்றது?

14. எந்த மக்கள் போரில் புறங்காட்டி ஓடினர்?
விடை :..........

15. யாரோடு உடன்படிக்கை செய்து கொண்டேன்?
விடை :..........

பெயர் :..........
முகவரி :..........
பங்கு :..........


**முடிவுத்திகதி 15.04.2022**

"எல்லோரையும் நம்புவது பயங்கரமானது, யாரையும் நம்பாமல் இருப்பது அதிபயங்கரமானது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 06 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்




- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01ற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

பெயர் : ........................................

முகவரி : ........................................

தரம் : ........................................

பங்கு : ........................................

முடிவுத்திகதி 15.04.2022

1ம் பரிசு - 500/-    2ம் பரிசு - 300/-    3ம் பரிசு - 200/-

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி – 39
## 2 திமொத்தேயு ( 3 – 4 ) வரை

**பங்குபற்றியவர்கள் : 35 பேர்**
**சரியாக விடையளித்தோர் : 28 பேர்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தி | ர | ட் | டி | க் | கொ | ள் | வ | ர் | |
| ரு | போ | தி | று | உ | ன | ம | வு | ன | இ |
| த் | த | மை | ரு | பெ | ற் | த | ழ் | ள | றை |
| தொ | னை | உ | று | தி | யா | ய் | வா | ள் | ப் |
| ண் | யை | டு | ட் | யி | ணை | ஆ | ய | யு | ப |
| டு | தி | ரு | ம | றை | நூ | ல் | ரி | கி | ற் |
| வி | சு | வா | ச | த் | தி | ல் | நே | ழ் | று |
| கு | ற் | த | ப | ப் | பி | ற் | க | மூ | ட |
| மீ | ட் | ப | ளி | ப் | பா | ர் | | | ன் |
| | க | கு | தா | த் | ரி | உ | சி | ட் | மா |

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/= ரூபா
நெ. டனீற் ஷரோன்
இல. 563, செல்வநாயகபுரம்

2ம் பரிசு 300/= ரூபா
ஜெ. ஷெனுவ்
மூதூர்

3ம் பரிசு 200/= ரூபா
D.N. டியாஷா
குவாடலூப்பே

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

**பங்குபற்றியவர்கள் : 14 பேர்**

### பரிசுக்குரியவர்கள்

500/= ரூபா
ம. ரிதுஷன்
இல: 35, ஹெம்பேக்கர் வீதி
பாலையூற்று

300/= ரூபா
ப. மெர்வினடிறோன்
வண்ணாங்குளம்
முல்லைத்தீவு

200/= ரூபா
அரின் டார்வின்
21/3 வித்தியாலயம் வீதி
பேராலயம்

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி - 46
## யோபு 32 - 42 அதிகாரம்

**பங்குபற்றியவர்கள் : 27 பேர்**
**மிகச் சரியாக விடையளித்தோர் : 03 பேர்**

500/= ரூபா
ரதுஷான் மேரிசசிரேகா
6ம் கட்டை, கப்பல்துறை
தம்பலகமம்

300/= ரூபா
P. கொன்சலா
இல: 125, உட்துறைமுக வீதி
உவர்மலை

200/= ரூபா
S.சர்மிலா
இல: 529/31, ஏகாம்பர வீதி
குவாடலூப்பே

## புனித மாற்கு நற்செய்தி
## அதிகாரம் 5 – 7
## போட்டி முடிவுகள்

**பங்குபற்றியவர்கள் : 41 பேர்**
**மிகச் சரியாக விடையளித்தோர் : 05 பேர்**

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/= ரூபா
P. சியா
வண்ணாங்குளம்
முல்லைத்தீவு

2ம் பரிசு 300/= ரூபா
P. டிலக்சினி
வண்ணாங்குளம்
முல்லைத்தீவு

3ம் பரிசு 200/= ரூபா
இ. ஜெசானியா
இல. 30, சங்கவீதி
பேராலயம்

“தோல்வியடைவதற்கு நான் வருத்தப்படவில்லை, நான் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்த பிறகு வரும் தோல்விக்கு நான் கவலைப்படுவதில்லை”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செபிப்பதில் நம்பிக்கை உள்ளவர்களாகவும், பகிர்ந்து வாழ்வதில் ஆர்வமுள்ளவர்களாகவும் வாழுங்கள்"

## திருப்பாலத்துவ நூற்றாண்டு விழாவில் திருமலை ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அழைப்பு



2022ம் ஆண்டிற்கான திருப்பாலத்துவசபை ஞாயிறு திருப்பலி விசேடமான முறையில் மறைமாவட்ட ஆயர் தலைமையில் மூதூர் மறைக்கோட்டத்தில் மூதூர் பங்கில் நடைபெற்றது. இந் நிகழ்வில் நூறு சிறார்களுக்கு திருப்பாலத்துவசபை நிரந்தரச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது. பாப்பரசரின் கீழ் திருப்பாலத்துவசபையின் நான்கு சபைகளும் ஒன்றாகக் கொண்டு வரப்பட்டதன் நூறு ஆண்டுகள் நிறைவை முன்னிட்டே இந்த சிறப்பான திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இத்திருப்பலிக் கொண்டாட்டமானது, "நான் இயேசுவைக் கண்டதால் மகிழ்ச்சி அடைகின்றேன்" என்ற கருப்பொருளில் அமைந்தது. ஆயர் அவர்கள் தன்னுடைய மறை உரையில் பழைய ஏற்பாட்டில் சாமுவேல் ஆண்டவருடைய வார்த்தைக்கு செவிசாய்த்து வாழ்ந்தது போலவும், நாமாள் குணம் பெறுவதற்கு ஒரு சிறுமி காரணமாக இருந்தது போலவும், இயேசுவினுடைய அப்பம்பலுகுதல் புதுமைக்கு ஒரு சிறுவனின் மனப்பகிர்வும் தாராள உள்ளமும் காரணமாக இருந்ததுபோலவும் சிறுவர்களாக இருக்கிற பிள்ளைகள் செபிப்பதில் நம்பிக்கை உள்ளவர்களாகவும், பகிர்ந்து வாழ்வதில் ஆர்வமுள்ளவர்களாகவும் வாழ முயற்சிக்க வேண்டும் என்று திருப்பாலத்துவ சபையின் மூன்று பண்புகளையும் சிறப்பான முறையில் வெளிப்படுத்தினார். சகாயபுரம், இருதயபுரம், மூதூர் ஆகிய மூன்று இடங்களில் இருந்தும் பிள்ளைகள் சிறப்பான முறையில் திருப்பலியில் கலந்து கொண்டார்கள்.





## "இனிமை இல்லம்" சஞ்சிகை வெளியீடு









திருகோணமலை மறைமாவட்ட குடும்ப அப்போஸ்தலிக்கப் பணியகத்தினால் "இனிமை இல்லம்" என்னும் சஞ்சிகை (மீள்) வெளியிடப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் குடும்ப அப்போஸ்தலத்திற்குப் பொறுப்பாக இருந்த அருட்தந்தை அன்டனி லியோ அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டு, திரு.தா.பி.சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்து அவரது மறைவிற்குப்பின் நிறுத்தப்பட்டிருந்ததை அவதானித்த தற்போதைய இயக்குனர் அருட்தந்தை அ. றொஹான் பேர்னாட் அடிகள் பொருத்தமான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு குறித்த சஞ்சிகையினை மீள ஆரம்பித்து புத்தெழுச்சியூட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த சஞ்சிகை வெளியீடானது 08.01.2022 அன்று புனித ஹூர்து அன்னை திருத்தலம், பாலையூற்று, திருகோணமலையின் "அனா" மண்டபத்தில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையும், கௌரவ விருந்தினராக பட்டய முகாமைக் கணக்காளர் கலாநிதி. இ. ஸ்ரீ ஞானேஸ்வரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் திரு.நா.மணிவண்ணன் அவர்களும், ஓய்வு பெற்ற ஆயர் கலாநிதி. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களும், மணி விழாக்காணும் தம்பதியினர் - திரு.திருமதி. செபஸ்தியான் அல்பிரட் மரிய சிரோன்மணி ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். சஞ்சிகையின் அட்டைப்பட பதாதை மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையால் திரை நீக்கம் செய்யப்பட்டது. சஞ்சிகையின் முதற்பிரதியானது இயக்குனர் அருட்பணி.அ.அ.றொஹான் பேர்ணாட் அடிகளாரால் ஆயருக்கு வழங்கி வைக்கப்பட்டது. வருகை தந்திருந்த அதிதிகளுக்கு ஆயரினால் சஞ்சிகையின் சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.வெளியிடப்பட்ட சஞ்சிகை தொடர்பான கருத்துரையினை கௌரவ விருந்தினர் கலாநிதி.இ.ஸ்ரீ ஞானேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார்.

திருமதி.லொறேற்றா அருள்பிரகாசம்

## வடக்கு கிழக்கு ஆயர்கள் பேரவையின் அழைப்பில் மறைக்கல்வி இயக்குனர்கள் சந்திப்பு

வடக்கு கிழக்கு ஆயர்கள் பேரவையின் ஒழுங்கமைப்பில் இவ்வருடம் ஆடி மாதம் 4ம் திகதி தொடக்கம் ஆவணி மாதம் 4ம் திகதி வரை மடு ஆலயத்திலே நடைபெறவுள்ள மறையாசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி முகாம் தொடர்பான மறைக்கல்வி இயக்குனர்களுக்கிடையேயான கலந்துரையாடல் 10.02.2022 அன்று வவுனியா ரம்பைக்குளம் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நான்கு மறைமாவட்டங்களில் இருந்தும் தலா 12 மறையாசிரியர்கள் இந்நிகழ்வில் பங்குபெறவுள்ளனர். ஒரு மாதகாலம் தங்கியிருந்து இந்தப்பயிற்சியை முடிப்பவர்கள் மறைமாவட்டங்களுக்குத் திரும்பி மறையாசிரியர்களாக தங்கள் பணியைத் தொடர்வார்கள் என்பது இந்நிகழ்ச்சித் திட்டத்தின் எதிர்நோக்காகும். இப்பயிற்சி முகாமிற்கான ஒழுங்குகள். நிகழ்ச்சி திட்டவரைவு மற்றும் வளவாளர்கள் போன்ற பல விடயங்கள் இவ்வியக்குனர்களின் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் தலைமையில இடம்பெற்ற இந்நிகழ்விற்கு வவுனியா ரம்பைக்குளம் பங்குத்தந்தை தேவையான சகல ஆயத்தங்களையும் செய்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.









### தேசிய மறைக்கல்வி நடுநிலையத்திலிருந்து ஆய்வு கட்டுரை

தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் 2021ம் ஆண்டு நடாத்தப்பட்ட மறையாசிரியர் தேர்வுகளில் இறுதி தேர்வில் பெற்ற பரீட்சாத்திகள். அதன அடுத்த கட்டமான ஆய்வு கட்டுரை எழுதுவதற்கு அவர்களுக்கான ஆய்வு கட்டுரை தலைப்புக்களை ஏற்கனவே அவர்களுக்கு அனுப்பிவிட்டோம். இதுவரை அவற்றைப் பெற்றிராத பரீட்சாத்திகள் தொலைபேசி எண் 0112685459 வழியாக எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

அருட்சகோதரி. ரஞ்சி போல்துறை
தமிழ்பிரிவு பொறுப்பாளர்
தேசிய மறைக்கல்வி நடுநிலையம்

BEN VISION PRINTERS, TRINCOMALEE 076 9000035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org